52

யாழ். - 30/=
வன்னி - 20/=

# உதயன்

சுடர்: 29 கதிர்: 362 வள்ளுவர் ஆண்டு: 2045 கார்த்திகை 7, ஞாயிறு 23.11.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily



உலகக் கிண்ண கிரிக்கெட்டில் இந்தியா சம்பியனாவது கடினம்

பக்கம் 27

## மைத்திரிபால பங்கேற்ற ரி.வி நிகழ்ச்சிக்கு தடங்கல்



யாழ்ப்பாணம், நவ. 23
எதிர்க்கட்சியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட எதிர்க் கட்சித் தலைவர்கள் பங் கேற்ற நேரடித் தொலைக் காட்சி நிகழ்ச்சியை மக்கள் பார்க்க முடியாதவாறு தடை ஏற்படுத்தப்பட்டுள் ளது.
எம்.பீ.சி ஊடக வலைய மைப்பின் சிரச தொலைக் காட்சி நிகழ்ச்சியே இவ்

❖25 ஆம் பக்கம் பார்க்க

## மைத்திரிபாலவின் பாதுகாப்பு அவுட்

கொழும்பு, நவ. 23
எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக அறிவிக்கப் பட்டுள்ள மைத்திரிபால சிறிசேனவின் பாதுகாப்பு மற்றும் அவரது வீட்டுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு என்பன நேற்று முதல் மீளப் பெறப்பட்டுள்ளன.
ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவின் அமைச்சரவை யில் சுகாதார அமைச் சராக இருந்தவரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த வருமான மைத்திரிபால சிறிசேன, நேற்றுமுன்தினம் பொது எதிரணியின் ஜனா திபதி வேட்பாளராக அறி விக்கப்பட்டார்.
இதனையடுத்து, ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷவி

❖25 ஆம் பக்கம் பார்க்க

# யாழ். குடாநாட்டில் 13 பேருக்கு எய்ட்ஸ்

### இந்த வருடத்தில் மட்டும்

சிறுமிகள். இளம் பெண்கள் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 23
யாழ். மாவட்டத்தில் இந்த வருடத்தில் மாத்திரம் 13 பேர் எய்ட்ஸ் நோயாளர்களாக இனங் காணப்பட்டுள்ளனர்.
அவர்களில் 2 பேர் தாமத மாகச் சிகிச்சைக்கு வந்தத னால் அவர்களைக் காப்பாற்ற முடியாது போய்விட்டது என்று

❖25 ஆம் பக்கம் பார்க்க

## 'ஐயோ சிறிசேன'

### கவலைப்படுகிறார் ஜனாதிபதி



யாழ்ப்பாணம், நவ. 23
எதிரணி வேட்பாளராகக் கள மிறங்கியுள்ள மைத்திரிபால சிறிசேனவை நினைத்துக் கவலைப்படுவதாக, ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ தெரி வித்துள்ளார்.
அத்துடன் ரணிலின் வீட்டின்

❖25 ஆம் பக்கம் பார்க்க

# பக்கா பிளான்

### மைத்திரிதான் பொது வேட்பாளர் என்ற இரகசியத்தைப் பேண
### செய்மதி தொலைபேசி பாவனை, இலக்கத்தகடு மாற்றப்பட்ட வாகனங்கள்

யாழ்ப்பாணம், நவ. 23
சிறிலங்கா சுதந்திரக் கட்சி யின் பொதுச் செயலாளராக இருந்தவரான அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதித் தேர்தலில் எதிர ணியின் பொது வேட்பாள ராக்கும் திட்டம் மிக மிக இர கசியமாக முன்னெடுக்கப் பட்டுள்ளது. அதுபற்றிய தக வல்கள் வெளியே கசிந்து ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ தரப்பு உஷாரடைந்து விடாமல் இருப்பதற்காகத் திட்டங்கள் மிகக் கச்சிதமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்த நகர்வு தொடர்பான அனைத்துத் தொடர்புக ளுக்கும் செய்மதித் தொலை பேசிகளே பயன்படுத்தப்பட்



டுள்ளன. செய்மதித் தொலை பேசிகளை ஒட்டுக்கேட்பது கடினமானது என்பதால் அரச புலனாய்வாளர்களை ஏய்ப் பதற்கு இந்த வழிமுறை கையாளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.
மைத்திரிபாலவை பொது

❖25 ஆம் பக்கம் பார்க்க

## தேர்தலில் யாரை ஆதரிப்பது? கூட்டமைப்பு நாளை கூடுகிறது

யாழ்ப்பாணம், நவ. 23
ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் ஆராய்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாளை திங்கட்கிழமை கொழும்பில் கூடவுள்ளதா கத் தெரிவிக்கப்படுகின்றது.
ஜனாதிபதித் தேர்தலில் போட் டியிடும் எதிரணி வேட்பாள ரும் யார் என்று அறிவிக்கப் பட்டுள்ள நிலையில், கூட்ட மைப்பு இன்னமும் தனது

❖26 ஆம் பக்கம் பார்க்க

## இராணுவச் சிப்பாய்க்கு 10 வருட கடூழிய சிறை

### சிறுமியை வன்புணர்ந்த குற்றத்துக்காக

யாழ்ப்பாணம், நவ. 23
பல வருடங்களுக்கு முன்னர் பதின்ம வயதுத் தமிழ்ச் சிறுமி ஒருத்தியை வன்புணர்வு செய்த குற்றத்துக்காக ராணு வச் சிப்பாய் ஒருவருக்கு யாழ். மேல் நீதிமன்று 10 வருடங்

❖26 ஆம் பக்கம் பார்க்க

## நாயை விடவும் தாழ்ந்தவர்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர்

### இப்படிக் கருத்துச் சொல்கிறவர் அமைச்சர் டக்ளஸ்



யாழ்ப்பாணம், நவ. 23
தமிழ்த்தேசியக் கூட்டமைப் பையும் வடமாகாண சபை யையும் வைக்கோல்பட்டடை நாய் என்று கூறமுடியாது. அவர்கள் அதையும் விட தாழ்ந்தவர்கள் எனக் கூறியி

❖25 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு மீனவரையும் விடுவிக்குமாறு யாழ்ப்பாணத்தில் நேற்று ஆர்ப்பாட்டம்



யாழ்ப்பாணம், நவ. 23
தூக்குத் தண்டனை விதிக்கப் பட்ட வடக்கு மீனவர்கள் மூவ ரையும் விடுவிக்குமாறு கோரி நேற்று அவர்களின் மனைவி மார் மற்றும் உறவினர்கள்

❖26 ஆம் பக்கம் பார்க்க

## தேர்தல் அறிவிப்புடன் வன்செயலும் ஆரம்பம்

### ஐ.தே.க.வின் கொண்டாட்டத்தில் களுத்துறையில் துப்பாக்கிச் சூடு

கொழும்பு, நவ. 23
ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு, பொது எதிரணி வேட்பாளர் அறிவிப்பு என்ப னவற்றுடன் தேர்தல் வன் முறையும் துப்பாக்கிச் சூட்டு டன் ஆரம்பமாகியுள்ளது.
ஐ.தே.க ஆதரவாளர்கள் களுத்துறை மாவட்டத்தில் கொண்டாட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, இனந்தெரியாத குழுவினர் புகுந்து துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளனர். இதில் ஒரு வர் காயமடைந்துள்ளார்.
களுத்துறை மாவட்டத்தில் உள்ள மக்கோனா என்ற இடத்தில் பெரும் எடுப்பில்

❖25 ஆம் பக்கம் பார்க்க

## விரைவில் அமைச்சரவை மாற்றம்

### பிரதமர் பதவிக்குழ் புதியவர் நியமனம்

யாழ்ப்பாணம், நவ. 23
சிறிலங்கா சுதந்திரக் கட்சி யின் பொதுச் செயலாளரான அமைச்சர் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதித் தேர்த லில் பொது எதிரணி வேட் பாளராக அறிவிக்கப்பட் டதை அடுத்து, இன்னும் ஓரிரு வாரங்களில் அமைச்ச ரவையை மாற்றியமைக்க இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.
மைத்திரிபாலவும் அவருடன் அமைச்சர்கள் சிலரும் அர சைவிட்டு வெளியேறியதைத்

❖25 ஆம் பக்கம் பார்க்க

## மஹிந்த அரசே ஆடிப்போகும் கிரக பெயர்ச்சி வெகுவிரைவில்

*மேர்வின் சில்வா கூறுகிறார்*



யாழ்ப்பாணம், நவ. 23
இந்த அரசே கிறுகிறுத்துப் போகுமளவுக்குக் கிரகப் பெயர்ச்சி எதிர்காலத்தில் இடம்பெறும். ஏற்கனவே கூறியவாறு ஒரு கிரகப் பெயர்ச்சி நடந்தேறியுள்ள தாக அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.
'நாட்டில் நடக்கப் போகும்

❖25 ஆம் பக்கம் பார்க்க

"மரங்களின் மீது கரிசனை கொண்ட கடவுள் அவற்றை வரட்சி, நோய்கள் பனிச்சரிவுகள் ஆயிரமாயிரம் சூறாவளிகள் மற்றும் கடும் வெள்ளப் பெருக்குகளில் இருந்து காப்பாற்றினாலும் முட்டாள்களிடம் இருந்து மட்டும் அவரால் அவற்றைக் காப்பாற்ற முடியவில்லை "

ஜோன் மூர் (அமெரிக்க இயற்கையியலாளர்)

# சம்பள உயர்வு, நிரந்தர நியமனம், ஒய்வூதியம் வடக்கு கூட்டுறவுப் பணியாளருக்கு வேண்டும்

## தொழிற்சங்க மாநாட்டில் நேற்றுத் தீர்மானங்கள்





யாழ்ப்பாணம், நவ.23

கூட்டுறவு ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தை ஐம்பது வீதத்தால் அதிகரிக்க வேண்டும், பல வருடங்களாக நிரந்தர நியமனம் வழங்கப்படாத பணியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும், கூட்டுறவுப் பணியாளர்களுக்கான ஓய்வூதியத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் ஆகிய மூன்று தீர்மானங்கள் நேற்று நடைபெற்ற வடக்கு மாகாணக் கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தின் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

வடக்கு மாகாணக் கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தின் மாநாடு நேற்று மிகவும் எழுச்சி பூர்வமாக இடம்பெற்றது.

வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களின் சகல பணியாளர்களும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

குறிப்பாக வன்னிப் பகுதியில் உள்ள கூட்டுறவுப் பணியாளர்கள் பெரும் எண்ணிக்கையில் படையெடுத்து வந்து இந்த மாநாட்டில் பங்கேற்றனர்.

வட மாகாணக் கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத்தின் தலைவர் சிவகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் ஊழியர் தொழிற்சங்கத்தினால் மூன்று தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

கூட்டுறவு ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தை ஐம்பது வீதத்தால் அதிகரிக்க வேண்டும், பல வருடங்களாக நிரந்தர நியமனம் வழங்கப்படாத பணியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும், கூட்டுறவுப் பணியாளர்களுக்கான ஓய்வூதியத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் ஆகிய தீர்மானங்களே நிறைவேற்றப்பட்டன.

முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமாக இருந்த மாநாடு சுமார் அரைமணி நேரம் கழித்தே ஆரம்பமாகியது. மாநாட்டின் முதன்மை விருந்தினரான அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா வருகை தருவதில் தாமதம் ஏற்பட்டதால் மாநாடு தாமதித்தது.

மாநாட்டில் வடமாகாண சபையின் உறுப்பினர்களும் கூட்டுறவு இணைப்பாளருமான கே.சயந்தன், ப.அரியரத்தினம், எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.தவராசா, பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரெத்தினம், வட மாகாணக் கூட்டுறவு ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், உதவி தொழில் ஆணையாளர் திருமதி மீனாலோஜினி ஜெகதீஸ்வரன், யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன், முல்லைத்தீவு மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.பாலச்சந்திரன் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், பணியாளர்கள் போன்றோர்கள் கலந்து கொண்டனர்.

மாநாட்டுக்கு வருகை தந்த அனைவருக்கும் தொழிற்சங்கத்தால் சுடசுடச் பசுப்பால் வழங்கப்பட்டது.

இந்தக் கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க மாநாட்டின் மூலம் கூட்டுறவாளர்களுக்கு ஒரு தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாகவும், கடந்த பல வருடங்களாக தட்டிக்கேட்போரின்றி இருந்த கூட்டுறவுப் பணியார்களின் கரங்கள் பலமடைந்துள்ளதாகவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். மாநாடு பிற்பகல் 1.30 மணியுடன் நிறைவு பெற்றது.

எதிர்வரும் தைத்திருநாள் பொங்கலுக்கு முன்னர் வட மாகாண கூட்டுறவுப் பணியாளர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும். அவர்கள் தைப் பொங்கலை இனிமையாகக் கொண்டாடி மகிழக் கூடிய வகையில் உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்று கூட்டுறவு இணைப்பாளரும் வடமாகாண சபையின் உறுப்பினருமான கே.சயந்தன் இங்கு உறுதியளித்தார்.

வடமாகாண தொழிற்சங்க மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

கூட்டுறவுத் தொழிற் சங்கத்தின் கோரிக்கைகளை முழுமையாக ஏற்றுக் கொள்கின்றோம். இந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும். மாநாட்டில் நல்ல வார்த்தை கூறிவிட்டு அதை பின்னர் நிறைவேற்றாமல் இருக்க முடியாது. நிச்சயமாக நிறைவேற்றப்படும்.

இதற்கென வடமாகாண சபை கூட்டுறவு ஆணையாளர் மற்றும் கூட்டுறவுப் பணியாளர்கள் தொழிற்சங்கத்தினரை உள்ளடக்கிக் குழு ஒன்றை விரைவாக அமைக்கும்.

இக்குழு ஊடாக இந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும். இந்தக் கோரிக்கைகள் எதிர்வரும் தைத்திருநாள் பொங்கலுக்கு முன்னர் நிறைவேற்றவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்-என்றார். (த-10-17)

# மிச்செல் ஜே. சிசனுக்கு ஐ.நாவில் உயர் பதவி



யாழ்ப்பாணம், நவ. 22

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பதவியிலிருந்து மிச்செல் ஜே. சிசன் விலகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அவர் ஐ.நாவுக்கான அமெரிக்கப் பிரதித் தூதுவராகச் செல்லவுள்ளமையாலேயே பதவி விலகவுள்ளதாகத் தெரியவருகின்றது.

ஐ.நா.வுக்கான அமெரிக்காவின் பிரதித் தூதுவர் மற்றும் ஐ.நா பாதுகாப்புச் சபைக்கான பிரதித் தூதுவர் பதவிக்கு மிச்செல் ஜே. சிசனின் பெயரை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கடந்த ஜீலை மாதம் முன்மொழிந்திருந்தார்.

அமெரிக்க செனட் வெளிவிவகாரக் குழு அவரது நியமனத்துக்குத் தற்போது அங்கீகாரம் அளித்துள்ளது.

இதையடுத்து, மிச்செல் ஜே சிசன் விரைவில் புதிய பதவியைப் பொறுப்பேற்பார் என்று தெரியவருகிறது.

2011 ஆம் ஆண்டு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராகப் பொறுப்பேற்ற மிச்செல் ஜே. சிசன், இலங்கை அரசுடன் கடும் போக்கைக் கடைப்பிடித்து வந்தவர். இதனால் அவ்வப்போது இலங்கை அரசால் கடுமையாக விமர்சிக்கப்பட்டு வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

# சகல ராணுவ முகாம்களிலும் மும்மொழிப் பெயர்ப் பலகை

கொழும்பு, நவ. 23

நாட்டிலுள்ள அனைத்து ராணுவ முகாம்கள், அவற்றோடு சம்பந்தப்பட்ட அனைத்து நிறுவனங்கள் ஆகியவற்றின் பெயர்ப் பலகைகளை மும்மொழிகளிலும் பொருத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரச கரும மொழிகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அனைத்து ராணுவ முகாம்களிலும் உள்ள பெயர்ப் பலகைகளை மும்மொழிகளிலும் பொறிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அரச கரும மொழிகள் ஆணைக்குழுவினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு ராணுவத் தளபதி சம்மதம் தெரிவித்திருப்பதால் அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஆர்.ரணவக்க கூறியுள்ளார்.

இதற்கமைய அனைத்து ராணுவ முகாம்கள் மற்றும் அவற்றுடன் சம்பந்தப்பட்டுள்ள 300 வரையிலான நிறுவனங்களின் பெயர்ப்பலகைப் பட்டியலொன்று ஆணைக் குழுவுக்குக் கிடைத்திருப்பதாகவும், வெகுவிரைவில் அவற்றை மும்மொழிகளிலும் உருவாக்கி ராணுவத் திடம் கையளிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் கூறினார். (த-22)

# விடுதியில் பிடிபட்டவர்கள் எச்சரிக்கப்பட்டு விடுவிப்பு

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட விடுதி ஒன்றில் சமூகச் சீர்கேடு இடம்பெறுவதாகப் பொதுமக்கள் தகவல் வழங்கியதையடுத்து அங்கு சென்ற சுன்னாகம் பொலிஸார் விடுதியில் இருந்த ஆண் ஒருவரையும் பெண் ஒருவரையும் அழைத்துச் சென்று பின்னர் விடுவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது. சம்பவத்துடன் தொடர்புபடும் பெண் ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்டவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரை அழைத்துச் சென்றிருந்தவர் என்று கூறப்படும் ஆண் தனது வசிப்பிடத்தை உறுதிப்படுத்தியதையடுத்து கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டு பொலிஸாரால் விடுவிக்கப்பட்டார். அவர் சுன்னாகம் பொலிஸ் பிரிவில் கராஜ் நடத்திவரும் ஒருவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண் ஆள் அடையாள அட்டை இல்லாததனால் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (த-4)

# லூர்து மாதா கெபி உடைத்துச் சேதம்



கிளிநொச்சி, நவ. 23

கிளிநொச்சி உருத்திரபுரம் 8 ஆம் வாய்க்கால் சந்தியில் அமைந்துள்ள லூர்து மாதா கெபி உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளது.

கடந்த 17ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 1940 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்தக் கெபி உருத்திரபுரம் கிராமத்தில் முக்கிய தலமாக விளங்குகின்றது.

சைவ மக்களும் தங்களுடைய வயல் செய்கைகளின்போது பொங்கல் செய்து மாதாவுக்குப் பூசைகள் செய்த பின்னரே வேலைகளில் ஈடுபடுகின்றனர்.

சிறப்பு வாய்ந்த தலமாக விளங்கிவரும் இந்தக் கெபியில் கடந்த 17ஆம் திகதி இரவு மாதா சொரூபம் பெயர்க்கப்பட்டு குருசு உடைத்தெறியப்பட்டு ஆலயத்தைச் சூழ பொருத்தப்பட்டிருந்த மின்குமிழ்களும் அடித்து நொருக்கப்பட்டுள்ளன. மதுபோதையில் வந்த சிலரே இதனை உடைத்துச் சேதப்படுத்தியதாக மக்களால் இனங்காணப்பட்டு கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிசார் ஆலயம் உடைக்கப்பட்டமை தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டனர். (த-18)

# வரி செலுத்துவோருக்காக வன்னியில் விசேட ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ. 22

2013-2014 ஆம் வரி மதிப்பீட்டு ஆண்டுக்குரிய வரிசெலுத்துநர்களுக்கான விசேட ஏற்பாடுகள் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ். பிராந்திய உதவி ஆணையாளர் திருமதி.சு.சர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் வருமான வரி விபரத் திரட்டுக்களைச் சமர்ப்பிக்க வேண்டியது வரி செலுத்துநர்களின் கடப்பாடாக உள்ள நிலையில் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த வரி செலுத்துநர்களின் நன்மை கருதி எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை கிளிநொச்சி பழைய மாவட்ட செயலகத்திலும், முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் ஏனைய பிராந்தியக் காரியாலயங்களிலும், கொழும்பு காரியாலயத்திலும் வரிக் கோவைகளைப் பேணுபவர்களும் விபரத் திரட்டுக்களை சமர்ப்பிக்க முடியும். இதேவேளை, முன்னைய வருடங்களில் வருமான வரி விபரத் திரட்டுக்கள், தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி விபரத் திரட்டுக்கள் சமர்ப்பிக்கப்படாதிருப்பின் அவற்றையும் சமர்ப்பித்துக் கொள்ள முடியும் - என்றார். (த-14)

# யார் இந்த மைத்திரிபால?



கொழும்பு, நவ. 23

பெலவத்த கமராலகே மைத்திரிபால யாப்பா சிறிசேன 1951ஆம் ஆண்டு, செப்ரெம்பர் 3ஆம் திகதி வட மத்திய மாகாணத்திலுள்ள பொலனறுவையில் சாதாரண விவசாயக் குடும்பம் ஒன்றில் பிறந்தார்.

உள்ளூர் பள்ளிக்கூடமொன்றில் ஆரம்பக் கல்வியை பயின்ற மைத்திரிபால சிறிசேன, 1973ஆம் ஆண்டில் கண்டி குண்டசாலை விவசாயக் கல்லூரியில், விவசாயப் பாடநெறி ஒன்றைப் பயின்றார். அதன் பின்னர் கிராம சேவை உத்தியோகத்தராகவும் சிறிது காலம் அவர் பணியாற்றியிருந்தார்.

1971 ஆம் ஆண்டில் ஜே.வி.பி. கிளர்ச்சிக் காலத்தில் சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த இளைஞர்களில் மைத்திரிபால சிறிசேனவும் இருந்துள்ளார். மாணவர் பருவத்திலேயே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் உள்ளூர் இளைஞர் அணி செயற்பாட்டாளராக இருந்துள்ள மைத்திரிபால சிறிசேன,

1970 களின் இறுதியில் அந்தக் கட்சியின் தீவிர உள்ளூர் அரசியல் குழுக்களில் அங்கம் வகித்துள்ளார். அதன் பின்னர், 1980 களின் தொடக்கத்திலிருந்தே கட்சியின் தேசிய மட்ட அமைப்புகளில் முக்கிய பதவிகளை வகிக்கத் தொடங்கினார்.

இதில் 1982ஆம் ஆண்டில் அகில இலங்கை இளைஞர் அணித் தலைவராகவும் பின்னர் கட்சியின் பொலிட் பீரோவிலும் உறுப்பினரானார்.

1989 ஆம் ஆண்டில், 38 ஆவது வயதில் பொலனறுவை மாவட்டத்திலிருந்து நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவானார். அதன்பின்னர் நடந்த அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றிபெற்று நாடாளுமன்றத்துக்கு வந்துள்ளார் மைத்திரிபால சிறிசேன.

பின்னர், சந்திரிகா பண்டாரநாயக்க 1994 ஆம் ஆண்டில் அமைத்த அரசில் துணை நீர்ப்பாசனத் துறை அமைச்சராக நியமனம் பெற்ற மைத்திரிபால, மூன்று ஆண்டுகளில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவியொன்றுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் துணைச் செயலாளராகவும் வளர்ச்சி கண்டார். பின்னர், அடுத்த மூன்று ஆண்டுகளில் கட்சியின் துணைத் தலைவராக நியமனம் பெற்ற சிறிசேன. 2004 ஆம் ஆண்டில் சந்திரிகா தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராகவும் நியமனம் பெற்றார்.

அதன்பின்னர், மஹிந்த ராஜபக்ஷவின் தலைமைக் காலத்திலும் அதே பதவி நிலையில் நீடித்துவந்த மைத்திரிபால, விவசாயத்துறை அமைச்சராகப் பதவி வகித்தார்.

அதன் பின்னர், விவசாயம் சம்பந்தப்பட்ட அரசின் பல்வேறு அமைப்புகளுக்கு தலைமை தாங்கிய அமைச்சர் மைத்திரிபால, 4 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட அமைச்சரவை மாற்றத்தின் படி, சுகாதார அமைச்சராகப் பதவி வகித்து வந்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடனான போர் உச்சகட்டத்தைத் தொட்டிருந்த காலத்தில் 2008 ஆம் ஆண்டில் கொழும்பின் புறநகர்ப்பகுதியான பிலியந்தலையில் மைத்திரிபால சிறிசேன தற்கொலை குண்டுத் தாக்குதல் முயற்சி ஒன்றில் இருந்து உயிர் தப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி நடக்கவுள்ள நிறைவேற்று ஜனாதிபதிக்கான அடுத்த தேர்தலில், மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிடுவதற்காக, எதிரணிகள் சேர்ந்து களமிறக்குகின்ற பொது வேட்பாளர் தான் என்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

63 வயதான மைத்திரிபால சிறிசேன மற்றும் அவரது மனைவியான ஜயந்தி புஸ்பா குமாரி தம்பதியருக்கு இரண்டு மகன்களும் ஒரு மகளும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

# ஆனையிறவு உப்பளம் ஜனவரியில் செயற்படும்

## 2 ஆம் கட்டப் பணிகளுக்காக 125 மில்லியன் நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம். நவ. 23

ஆனையிறவு உப்பளத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் 2015 ஆம் ஆண்டின் முற்பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்காக 125 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, உப்பளத்தின் முதலாம் கட்டப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளதால் அடுத்த வருடம் ஜனவரி மாதம் உப்பளத்தில் உப்பு உற்பத்திகள் மேற்கொள்ளப்படும் என்று பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் வருடாந்தம் 60 ஆயிரம் தொன்னுக்கு மேற்பட்ட உப்பு உற்பத்தி செய்யப்பட்டு வந்ததுடன் நாட்டின் பல பகுதிகளுக்கும் ஆனையிறவு உப்பு பயன்படுத்தப்பட்டு வந்தது. 1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் உப்பளத்தில் உப்பு உற்பத்தி நிறுத்தப்பட்டது.

777 ஏக்கர் விஸ்தீரணத்தைக் கொண்ட இந்த உப்பளத்தில் முதற்கட்டமாக 330 ஏக்கர் பகுதியைப் புனரமைப்புச் செய்வதற்குப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கு அமைவாக இந்த வருட ஆரம்பத்தில் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

முதற் கட்டமாகப் புனரமைப்புப் செய்யப்படும் பகுதியில் உப்புப் பாத்திகள், கால்வாய்கள், வான்வழிகள், வெள்ளத் தடுப்பு அணைகள், நீர்த்தேக்கத்துக்கான கற்குவியல் பாதுகாப்பு அணைகள், உப்பள மேடைகள், உட்கட்டமைப்பு வசதிகள் என்பன புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 10 கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் மகளிர் அபிவிருத்திச் சங்கங்கள் இந்தத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன. உப்பு உற்பத்தி நடவடிக்கை முதலாம் கட்டமாக ஆரம்பிக்கப்பட்ட பின்னர் வருடாந்தம் 2ஆயிரம் மெற்றிக்தொன்னுக்கு மேற்பட்ட உப்பு உற்பத்தி செய்யப்படும்.

முதலாம் கட்டப் பணிகள் முடிவடைந்ததும் இரண்டாம் கட்டப் பணிகளில் 430 ஏக்கர் பகுதி புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. 2015 ஆம் ஆண்டுக் கருத்திட்டத்தில் இவை மேற்கொள்ளப்படவுள்ளன - என்றார். (கு-14)

# முல்லைத்தீவில் நெற்பயிர்களில் இலை மடிச்சுக் கட்டியின் தாக்கம்

## கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆலோசனை

முல்லைத்தீவு, நவ 23

அண்மை நாள்களாக நிலவும் மழையுடன் கூடிய மேகம் சூழ்ந்த மப்பும் மந்தாரமுமான காலநிலையின் விளைவாக முல்லைத்தீவு மாவட்டத்தில் நெற்செய்கையில் இலை மடிச்சுக் கட்டியின் தாக்கம் ஏற்பட்டுள்ளதாக முல்லைத்தீவு பிரதி விவசாயப் பணிப்பாளர் தெ.யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

முள்ளியவளை விவசாயப் போதனாசிரியர் பிரிவில் கரைச்சிக் குடியிருப்பு வெளிப் பகுதியிலும், குமுளமுனையில் பெரிய வெளிப் பகுதியிலும், கொக்குளாய்ப் பிரதேசத்திலும், புதுக்குடியிருப்பில் முள்ளிவாய்க்கால் மற்றும் கைவேலிப் பகுதிகளிலும், உடையார்கட்டு தெற்கு, கிழக்கிலும், ஒட்டுசுட்டான் புளியன்குளம், தண்டுவானிலும், முத்தையன்கட்டுப் பிரதேசத்திலும் பாண்டியன்குளம், மூன்றுமுறிப்பு ஆகிய பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டுள்ள காலபோக நெற்செய்கையில் இலை மடிச்சுக் கட்டியின் தாக்கம் தீவிரமடைந்துள்ளதாகப் பிரதேச விவசாயப் போதனாசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

இலைமடிச்சுக்கட்டி புழுக்கள் நெற்பயிரின் இலையைச் சுருட்டி அல்லது மடித்து உட்புறமிருந்து உள் இழையங்களைச் சுரண்டி உணவாக்குவதால் இலைகளில் முதலில் நீள் பக்கமாக வெண்ணிற அடையாளங்கள் தோன்றும். தாக்கம் அதிகரிக்கும் நிலையில் இலைகள் உலர்ந்து போகும்.

உக்கிரமான தாக்கம் ஏற்படும் போது கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத விடத்து விளைச்சல் முற்றாகப் பாதிக்கப்படும்.

இதனை முகாமைத்துவம் செய்வதற்கு கீழ்க்காணும் நடவடிக்கைகள் விவசாயத் திணைக் களத்தால் பரிந்துரை செய்யப்படுகின்றன.

1. அதிக நிழலை ஏற்படுத்தும் மரங்கள்/ கிளைகளை வயலில் இருந்து அகற்றுதல்.

2. மேலதிக நைதரசன் பசளை (யூரியா) பாவனையைத்தவிர்த்தல்.

3. இலை மடிச்சுக்கட்டிப் புழுக்களைப் பறவைகள் உணவாக்கும் ஆதலால் வயல் வெளிகளில் ஆங்காங்கே பறவை தாங்கிகளை நாட்டுதல்.

4. தாக்கம் தீவிரமாகும் நிலையில் விவசாயத்திணைக் களத்தால் சிபாரிசு செய்யப்படும் கீழ்க் காணும் விவசாய இரசாயனாங்களை முறைப்படி விசிறுதல்.

அசிபேற், குளோர்புளுவசியுறோன் (அற்றப்புறோன்), தயோசைக்ளெய்ம் (எவிசெக்ற்), பிப்ரொனில் (றீஜன்ற்), ரெபியுபெனோசயிட் (மிமிக்), குளோரன்ரனிலிபியுறோல்/ தயமெதொக்சாம் (வேர்டகோ) மேற்படி விவசாய இரசாயனங்களைச் சிபார்சு செய்யப்பட்ட அளவுகளில விசிறும் போதே கட்டுப்பாடு வினைத்திறன் மிக்கதாக அமையும் என்பதனை கவனத்தில் கொள்ள வேண்டும். விவசாய இரசாயனங்களை விசிறுவதாயின் பறவை தாங்கிகளை அகற்றுதல் வேண்டும்-என்றார். (கு)

# யாழ்.மாநகர சபை எல்லைக்குள் டெங்கு கண்காணிப்புக் குழுக்கள்

யாழ்ப்பாணம், நவ 23

யாழ். மாநகரப் பகுதியில் டெங்கு கண்காணிப்புக் குழுக்களை அமைக்கும் பணிகளில் சுகாதாரப் பகுதியினர் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாகவும் இந்த டெங்குக் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதில் அந்தப் பகுதி கிராம உத்தியோகத்தர்கள் தலைவராகவும், அந்தப் பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் செயலாளராகவும் இருப்பார்கள். அதன் உறுப்பினர்களாக குறித்த பகுதி சமூகப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

இந்தக் குழுவினரைப் பயன்படுத்தி டெங்கின் தாக்கத்தைத் தடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இந்த டெங்குக் கண்காணிப்புக் குழுவினர் தத்தம் பகுதியில் உள்ள மக்களின் இல்லங்கள் மற்றும் பொது இடங்களைக் கண் காணித்து விழிப் புணர்வுச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்கள். அதே வேளை, மாநகரப் பகுதியில் தற்போது ஜே/91 கிராம சேவகர் பிரிவில் இந்த டெங்கு கண்காணிப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டிருப்பதாகச் சுகாதார அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதனைவிட ஜே/92 கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் இந்த டெங்கு கண்காணிப்புக் குழு ஒன்று அமைப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட் டுள்ளன.

தொடர்ந்து யாழ்.மாநகரப் பகுதியில் ஏனைய கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் இந்த டெங்குக் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்படவும் உள்ளன. (கு-17)



# எதிரணியினர் ஆட்சிப் பீடம் ஏறினாலும் தமிழர் வாழ்வில் உடன் மாற்றம் வராது

## ஆயினும் இனப் பிரச்சினைக்கான தீர்வுத் தேடலை முன்னெடுக்க முடியும் என்கிறார் மனோ கணேசன்

கொழும்பு, நவ. 23
எதிரணி ஆட்சிப் பீடம் ஏறினால், தமிழ்மக்களின் வாழ்வில் பாலும் தேனும் உடனடியாக ஓடாது. அதிக எதிர்பார்ப்புக் களை முன் வைத்துஏமாறத் தேவையில்லை. ஆட்சியை மாற்றி ஜனநாய கத்தை நிலைநிறுத்தி, அடுத்த கட்டமாகவே இனப் பிரச்சினைக் கான தீர்வுத் தேடலை முன்னெ டுக்க முடியும். இவ்வாறு ஜனநா யக மக்கள் முன்னணியின் தலைவரும், பொது எதிரணித் தலைவர்களுள் ஒருவருமான மனோகணேசன் தெரிவித்துள் ளார்.

'ஆட்சி மாற்றத்திற்காக பல்வேறு காரணங்களுடன் எதிரணியில் இணைந்துள்ள அனைத்து சக் திகளும்தமிழ்பேசும்மக்களுக்கு நியாயம் வழங்க தயார் நிலை யில் இல்லை. இது கசப்பானதாக இருந்தாலும் உண்மை. ஆனா லும், ஆட்சிமாற்றம்எமக்குதேவை. ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, எதிரணி ஆட்சிப் பீடம் ஏறினால் தமிழ் பேசும் மக்களின் வாழ்வில் பாலுந்தேனும் உடனடியாக ஓடும் என நான் கூறவில்லை. அதிக எதிர்பார்ப்புகளை முன் வைத்து நாம் ஏமாறத் தேவை யில்லை. யதார்த்தத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். எமது முதல் நோக்கம் ஆட்சியை மாற்றி ஜனநாயகத்தை நிலைநாட்டுவ தாகும். அடுத்த கட்டமாகவே தேசிய இனப்பிரச்சினை தொடர் பானதீர்வுதேடல்களை முன்னெ டுக்க முடியும்' என்று மனோக ணேசன் குறிப்பிட்டுள்ளார்.

பொது வேட்பாளராக முன்னாள் அமைச்சர் மைத்திரிபால சிறி சேன அறிவிக்கப்பட்ட பின்னர் அவர் விடுத்துள்ள ஊடக அறிக் கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவித் துள்ளதாவது:-

ஜனாதிபதி தேர்தல் தொடர் பான எதிரணியின் அதிரடி செயற் பாடுகள், நாடு முழுக்க வாழும் தமிழர்களுக்கும், முஸ்லிம்க ளுக்கும் புதிய நம்பிக்கை துளிர்களை தோற்றுவிக்க வேண்டும். ஆட்சி மாற்றத்தி னால் வரக்கூடிய ஜனநாயக இடைவெளியில் எமது அரசியல் நடவடிக்கைகளை சுதந்திரமாக முன்னெடுக்க முடியும். இன் றைய இன, மத நெருக்கடிநிலை மையில் இருந்து மீண்டு, எம்மை கொஞ்சம் ஆசுவாசப்ப டுத்திக்கொள்ள முடியும். இவையே தமிழ் பேசும் மக்களின் நம்பிக் கைகளாக இருக்க வேண்டும்.

எதிரணி கூட்டுத் தலைமையில் ரணில் விக்கிரமசிங்கவும், சந் திரிகா பண்டாரநாயக்கவும் இருப்பது நமக்குள்ள குறைந் தபட்ச நம்பிக்கை.

எமது முதல் நோக்கம் ஆட்சியை மாற்றி ஜனநாயகத்தை நிலை நாட்டுவதாகும். அடுத்த கட்ட மாகவே தேசிய இனப்பிரச் சினை தொடர்பான தீர்வுத் தேடல்களை முன்னெடுக்க முடியும். அத்தகைய ஒரு சூழல் இன்று தேசியரீதியாகவும், சர்வதேசியரீதியாகவும் ஏற்பட் டுள்ளது. இனப்பிரச்சினை யையும், அதிகார பகிர்வையும் இனியும் எவரும் ஒத்தி வைக்க முடியாது.

இந்த ஆட்சிமாற்றத்திற்காக பிரதான பெரும்பான்மை கட் சிகள் இரண்டும் ஒன்று சேர்ந் துள்ளன. எமது புதிய ஜனாதி பதி ஒரு இடைக்கால ஜனாதிபதி யாகவே இருப்பார். புதிய அர சும் ஒரு இடைக்கால அரசாகவே இருக்கும். நிறைவேற்று அதிகா ரத்தை மீண்டும் நாடாளுமன் றத்துக்கு வழங்கிவிட்டு இந்த அரசு மறையும்.

அடுத்த பொதுத் தேர்தலின் பின்னர் தோன்றும் புதிய அரசு, ஒரு நாடாளுமன்ற அரசாக இருக்கும். அந்த அரசை அமைக்கும் தேர்தலில் இன்று கூட்டு சேர்ந்து இருக்கும் அனைத்து கட்சிகளும் ஒரே அணியாக போட்டியிடாது.

இன்று ஆட்சி மாற்றம் கோரி பல்வேறு கட்சிகள் எதிரணியில் இணைந்துள்ளன. இவற்றில் மிகப்பெரும்பாலான கட்சிகள் பெரும்பான்மை இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி கள். தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு உடனடியாக அவசரப் பட்டுத் தீர்மானம் எடுக்கப்போ வதில்லை என்று இரா.சம்பந் தன் கூறியுள்ளார்.

சரியான முடிவை சரியான நேரத்தில் சம்பந்தன் எடுப்பார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. இந்த நிலையில் தமிழ், முஸ்லிம் மக்களின் வாக் குகளை பெற்றுள்ள ஏனைய கட்சிகள் அனைத்தும் படிப்படி யாக எதிரணியில் இணைய வேண்டும் என்று நான் அழைப்பு விடுக்கின்றேன். தமிழ், முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் எதிரணி கூட் டில் இணைந்தால் தான், இந்த கூட்டில் சமபலம் ஏற்படும் - என்று தெரிவித்துள்ளார். (த-5)

# பொது எதிரணியின் சின்னம் விரைவில்

யாழ்ப்பாணம், நவ. 23
பொது எதிரணியின் சின்னம் உள்ளிட்ட ஏனைய விடயங்கள் விரைவில் வெளியிடப்படும் என்று எதிரணி ஜனாதிபதி வேட் பாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் மாலை நடத்திய ஊடகவியலா ளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தேர்தலில் போட்டியிடுவதற் காகப் புதிய கூட்டணி ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப் படும். எதிர்வரும் நாள்களில் கூட் டணி தொடர்பில் கட்சிகளுக்கு இடையில் புரிந்துணர்வு உடன் படிக்கை கைச்சாத்திடப்பட உள்ளது. தேர்தல் கூட்டணிக் கான பெயர் மற்றும் சின்னம் தொடர்பில் ஏற்கனவே இணக் கப்பாடு எட்டப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (த-5)

# 1999 ஜனாதிபதித் தேர்தல் நீதியாக நடைபெற்றதா ?

## நேற்று மனம் திறந்தார் எஸ்.பி

கொழும்பு, நவ 23
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக் கான திகதி அறிவிக்கப்பட்டு, பொது வேட்பாளர் களமிறங்கி யுள்ள நிலையில், 1999ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகள் குறித்து அமைச் சர் எஸ்.பி. திஸாநாயக்க நேற்று நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக் கையில்,


இந்தத் தேர்தலில் நானே முன் னின்று செயற்பட்டேன். என்னால் முன்னெடுக்கப்பட்ட விடயங்களை நான் நன்கறிவேன். அது நியாய மான தேர்தலா அல்லது அநீதியாக நடைபெற்ற தேர்தலா என்றும் நான் அறிவேன். ஊழலுடன் நடைபெற்ற தேர்தல் என்பதனை அனைவரும் அறிவார்கள். கிரா மத்தில் இல்லாத அனைவரும் வாக்களித்தார்கள். ஐக்கிய தேசி யக்கட்சியினரை, வாக்குச் சாவ டிக்கு வரவிடாது துரத்தியடித்தனர். வாக்குச் சாவடிகளில் எந்தவொரு ஐக்கிய தேசியக் கட்சியினரோ அல்லது மக்கள் விடுதலை முன் னணியினரோ வரவிடாது துரத்தியடித்தோம். அவ்வாறு செய்யாவிடின் சந்திரிகா வெற்றி யீட்டியிருக்கமாட்டார்.

ஐந்து வருடங்கள் சிரமப்பட்டுப் பணியாற்றியமையினாலேயே நாங்கள் வெற்றி பெற்றதாகக் கூறினார். நான் அவருக்குச் சென்று வாழ்த்துக்களை தெரிவித் தேன். 49 வீதம் என்றேன். 50 வீதம் முடியாது என நான் முத லிலேயே கூறியிருந்தேன். எ[illegible] னும், நாங்கள் வெற்றி பெறுவோம் என்று கூறியிருந்தேன். மோசடி யான முறையில் வெற்றியீட் டினோம். என்னுடைய 49 வீதம், அவருக்கு 2 வீதம். இரண்டை யும் சேர்த்து 51 வீதம் கிடைத்தது. பொது வேட்பாளரது கட்சிக்கு, வரையறுக்கப்பட்ட மன்னிப்புக் கூட்டமைப்பு என பெயரிட்டால் மிகவும் பொருத்தமாக இருக்கும். -என்றார். (த-5)

## மரண அறிவித்தல்

### எஸ். எல். ஜேம்ஸ்

(ஓய்வுபெற்ற நிர்வாக அதிகாரி - நில அளவைத் திணைக்களம்)



யாழ்ப்பாணம், மாதகலைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பையும், கனடாவையும் வதிவிடமாக கொண்ட எஸ்.எல். ஜேம்ஸ் (ஓய்வு பெற்ற நிர்வாக அதிகாரி - நில அளவைத் திணைக்களம்) 21.11.2014 வெள்ளிக் கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி லோப்பையா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திருமதி செல்வராணி ஜேம்ஸ்சின் அன்புக் கண வரும், லீனஸ் ஜேம்ஸ் (ரொறன்டோ), திருமதி க்ரிச்டிடா ரஞ்சனா ஜோன் (Lyceum,Wattala), கலிஸ்டஸ் ஜேம்ஸின் (Proprietor - CJ Villas) ஆகியோ ரின் அன்பு தந்தையும், எபனேசர் ஜோன், திருமதி பட்ரீசியா லீனஸ் ஜேம் சின் (ரொறண்டோ) அன்பு மாமனாரும், கேஷாந்த் ஜோன், ட்ரூடி ஜேம்ஸ், தனுஷாந்த் ஜோன், டெபோரா ஜோன், நோயல் ஜேம்ஸ் ஆகியோ ரின் அன்பு பாட்டனாரும், காலஞ்சென்ற பங்கிறாஷஸ் லோப்பையா, காலஞ் சென்ற திருமதி மரியம்மா செபச்டியான்பிள்ளை, பொன்னு கோன் லோப்பையா, திருமதி பெர்னடெட் மாசிலாமணி (நாயகி) ஆகியோரின் அன்புச் சகோத ரருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 29.11.2014 அன்று ரொறண்டோவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C/17791) (10.6)

**CJ Villas**
**Colombo.**


## தேவை

**மனிதவளம், கணக்கீடு, வியாபார முகாமைத்துவம், B.Com/ கணக்கியல் பட்டம், க.பொ.த. உயர்தரம் வணிகக் கல்வி முடித்தவர்கள் முகாமைத்துவ பயிலுநராக தேவை.**

**சுறுசுறுப்பான, விவேகமுள்ள, மனிதவள நிர்வாகத்தில் ஆர்வ முள்ள 24 வயதிற்கு மேற்பட்ட ஆங்கிலத்தில் தேர்ச்சியும் தமிழ் அறிவும் கொண்ட கொழும்பு மத்தியில் வசிப்பவர் விரும்பத் தக்கது.**

தொடர்பு:
**UNITEC PLACEMENTS (Pvt) Ltd**
No. 67A, Gregory`s Road,
Colombo - 07 (சி.17860) (45.6.3)
E-mail - realcommestate@gmail.Com
SMS - 0727- 133533


## தவறிவிட்டது

சங்கானையைச் சேர்ந்த க.கோபிநாத் (841854381V) என்பவருடைய தே.அ.அட்டை, சாரதி அனுமதிப்பத் திரம், வரி அனுமதிப்பத்திரம், காப்புறுதி, வங்கி அட்டை என்பன மானிப்பாய் சந்திக்கும் சங்கானை பஸ் தரிப்பு நிலையத்துக்குமிடையில் நேற்று தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் வரும் தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளவும்.
தொ.பேசி: 0776450199


## வரணி ஆசனப் பதிவகத்தின் விசேட சலுகை

அன்னை முத்துமாரி
அதிசொகுசுப் பேருந்து
ரூபா 1250/=
**வரணி ஆசனப் பதிவகம்**
**174, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
தொடர்பு: 021 222 2868, 021 490 0955,
077 1531406 (41434)(5.6.3)


## மரண அறிவித்தல்

### திருமதி சிவபாக்கியம் சுப்பிரமணியம்



சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் விளானை, களபூமி, காரைநகரை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் சுப்பிரமணியம் நேற்று (22.11.2014) சனிக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - வள்ளி யம்மை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சுந்தரம்மா தம்பதிகளின் அன்பு மரு மகளும், காலஞ்சென்ற சிவசோதி (இலங்கை வங்கி முகாமை யாளர், கொழும்பு) மற்றும் விமலாதேவி, சறோஜினி தேவி, ஜெகசோதி (பிரான்ஸ்), விஜயலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும், புஸ்பராணி, காலஞ்சென்ற காசிநாதர் குலசேகரம், காலஞ்சென்ற பேரின்ப ராசா மற்றும் பொன்மலர் (பிரான்ஸ்), தியாகலிங்கம் (வைகுந்தன் களஞ்சியம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, பொன்னம்மா, திலகவதி பரமநாதன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2014) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தில்லை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**விளானை, களபூமி, காரைநகர்.**
T.P: 021 300 6647 (41457) தகவல்: **பிள்ளைகள்**

# விற்பனைக்கு

## விற்பனைக்கு
Long Model Hiace NP-GV xxxx
விலை- 31Laks
தொடர்பு: 077 930 9991 (41430)(5.6.3)

## காணி விற்பனைக்கு
யாழ்.உரும்பிராயில் கற்ப விநாயகர் கோயில், பலாலி வீதிக்கு கிழக்குப் பக்கமாக, 200 மீற்றர் தொலைவில் வீட்டுடன் 3 பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:0773 658 485 (சி/17557)(5.6.3)

## விற்பனைக்குண்டு
82 ஸ்ரீ CD 200 மோட்டார் சைக்கிளும் மற்றும் எஞ்சின் CD 200 இன் உதிரிப்பாகங்களும் விற்பனைக் குண்டு.
தொடர்பு: 077 509 8111 (52196)(4.6.3)

## வீடு விற்பனைக்கு
உரும்பிராய் தெற்கு, முதலாம் ஒழுங்கையில் வீட்டுடன் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 480 5191 (52199)(4.6.3)

## மல்லாகத்தில் வீடு விற்பனைக்கு
மல்லாகத்தில் குறைந்த விலையில் வீடு விற்பனைக்குண்டு.
(54270)(12.3) தொடர்பு: 077 470 2278

## MOTOR BIKE விற்பனைக்கு
மிகவும் நல்ல நிலையில் உள்ள JAPAN CBR 250CC MOTOR BIKE விற்பனைக் குண்டு. குறைந்த MILAGE, XI -xxxx தொடரிலக்கம்
தொடர்பு : 0774 896 046 (41433)(5.6.3)

## காணி விற்பனைக்கு
நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோயில் பின்புறம் பின் வீதியில் இருந்து இராசபாதை நோக்கிப் போகும்போது வீதியில் இருந்து மூன்றாவது காணி 10 பரப்பு உடன் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்பு: 077 224 3547 (41422)(4.6.3)

## காணி விற்பனைக்கு உண்டு
கோண்டாவிலில் இருந்து இருபாலைக்கு செல்லும் வழியில் இராசவீதி சந்தியில் ஐந்து பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும் தரகர் தேவை இல்லை.
தொடர்பு : 077 491 2596 (53880)(7.6.3)

## காணி விற்பனைக்கு
ஊரெழு, நீர்வேலி பிரதான வீதியில் 4½ பரப்புக் காணி சுற்று அத்திபாரம், கிணறு அடங்கலாக விற்பனைக்குண்டு.
(54409)(4.6.3)
தொடர்பு: 077 172 6582

## விற்பனைக்கு
கரைவலை மற்றும் அவுட்மோட்டர் புதிதாக சீராக்கி ஒரு மாதம் பாவித்த கரை வலை விற்பனைக்குள்ளது. 15 ஹோஸ் பவர் சுசுக்கி இனஅவுட்மோட்டர் விற்பனைக் குள்ளது. (சில மாதங்களே பாவித்தது)
தொடர்பு: 077 276 8022, 077 157 3997 (41403)(4.6.3)

## ஓட்டோ விற்பனைக்கு
பேக்கறி பாவனைக்கு உகந்த நல்ல நிலையில் உள்ள ஓட்டோ விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 675 2127, 077 699 1040 (52021)(4.6.3)

## வீடு காணி விற்பனைக்கு
பிரதான வீதி, சங்கானையில் (சேச் றோட்டுக்கும் தபால் கந்தோருக்கும் இடையில்) பழைய வீட்டுடன் கூடிய 5 பரப்புக்காணி உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: (41436)(5.6.3)
075 039 3007 / 021 221 3010

## CAMERA'S FOR SALE
PANASONIC (AG-HVX202AEN) 3 CAMRA'S
P2 MEMORY CARD = 5
CARD READER'S = 1
500000/=



CANON (XF300)
1 CAMERA 200000/=
CALL :- 0766554453

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு
இரண்டு மாதங்கள் நிரம்பிய உயர்ந் தரக ஜேர்மன் செப்பேட் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தடுப்பூசி போடப் பட்டுள்ளது
(53532)(12.3.6) தொடர்பு: 077 755 6244

## வீடு விற்பனைக்கு
கரவெட்டி சம்பந்தர் கடைய டியில் பயன் தரு மரங்கள், வெட்டுக்கிணற்றுடன் வீடு விற்பனைக் குண்டு.
தொடர்பு: 077 612 2386 (52012)(4.6.3)

## காணி விற்பனைக்கு
AVறோட், செம்மணி லேன் பேச்சியம்மன் கோயிலுக்கு அருகில் 6 பரப்பு 7 குழி விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்குண்டு. (54430)(45.6.3)
தொடர்பு: 077 978 9375, 077 517 3798

## காணி உடன் விற்பனைக்கு
யாழ்.கொழும்பு பிரதான வீதியில், மிருசுவில் ரயில் நிலையத்திற்கு 500 M அருகில் 2¾ பரப்புக்கு 10 குழி குறைய வீடு மற்றும் கடை கட்டுவதற்கு உகந்த காணி உடன் விற்பனைக்கு உண்டு. 16 இலட்சம். தரகர் வேண்டாம்.
(சி/ 17859)(5.6.3)
தொடர்பு: 0779 004 013

## காணிகள் விற்பனைக்கு
நெல்லியடி, கரவெட்டியில் பெற்றோல் செற் முன் 100 மீற்றர் தூரத்தில் நல்ல சூழலில் அமைந்துள்ள நி.பர 1½ யுடன் கூடிய கல்வீடு ஒன்றும் நெல்லியடி முருகமூர்த்தி வீதியில் அமைந்துள்ள நி.பர.1¾ இல் பயன்தரு விருட்சங்கள் கொண்ட காணியும்
(52016)(5.6.3) விற்பனைக்குள்ளன.
தொடர்பு: 077 958 2504 / 077 515 0489

## Car Sales
NISSAN SUNNY FB -15
Ex Saloon, Year -2001
1500 CC, Auto Full Option
WPHW, Silver, Milege-90 400 km
Remote, 2nd Owner
வவுனியா - 0777 790 336 (52200)(5.6.3)

## வீட்டுடன் காணிவிற்பனைக்குண்டு
சங்கத்தானை சாவகச்சேரி A 9 றோட் அருகில் சங்கத்தானை ஞானோதயா ரியூற்றறி அருகில் 2 அறை வீடு கிணறும் சேர்ந்த 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு
தொடர்பு கொள்ளவும் -
077 8697268, 0033 2382 90231 (41456)

## கார் விற்பனைக்கு
NISSAN -
B 11 - 14 - 6XXX
(54392)(12.3) தொடர்பு: 077 619 4363

# ஏனையவை

## வீடு வாடகைக்குத் தேவை
யாழ்ப்பாணம், திருநெல்வேலி அல்லது கொக்குவில் பிரதேசத்தில் இருவர் தங்கக்கூடிய வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 077 653 4411 (41449)(5.6.3)

## வீடு வாடகைக்கு தேவை
யாழ்.நகர் மத்தியில் (ரெலிகொம், யாழ். நூலக பகுதி, மெயின் வீதி, மாட்டீன் றோட், கே.கே.எஸ் றோட்) போன்ற பகுதிகளில் 5 அறைகள்/ 3 அறைகள் குளியலறையுடன் கூடிய வீடு தேவை. முற்பணம் வழங்கப்படும்.
ஜனகன் 077 248 7772 (சி/17767)(4.6.3)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

# வேலைவாய்ப்பு

## தேவை
கொழும்பில் இயங்கும் Company இற்கு Office work செய்யக்கூடிய (18-28) வயதிற்குட் பட்ட Female வேலையாள்கள் தேவை.
* O/L, A/L * தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு: 0772 598 250 (சி/17856)(5.6.3)

## தேவை
விவசாயம், கால்நடை வளர்ப்பில் ஆர்வ முள்ள சிறிய குடும்பம் தேவை. குடியிருப்பு வாழ்வாதாரம் நிரந்தரமாக வழங்கப்படும். ஆதரவற்றோர், விதவைகள், வறுமைக் கோட்டிற்குட்பட்டோர் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 288 1103 (41409)(4.6.3)

## வேலையாள் தேவை
யாழ்.மாநகர சபை எல்லைக்குள் அமைந் துள்ள மருந்தகம் ஒன்றுக்கு அனுபவ முள்ள, பழகவுள்ள பெண் மருந்தக உதவி யாளர் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 077 664 7464 / 021 222 8851 (54424)(5.6.3)

## வேலையாள்கள் தேவை
கொழும்பில் உள்ள பிரபல தனியார் நிறுவனம் ஒன்றின் விற்பனை வாகனத்தில் வேலை செய்வதற்கு திறமையும், நேர்மையும் உள்ள காசாளர், பொருள்கள் வழங்குபவர் தேவை.
* தங்குமிடவசதி இலவசம்
* சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
விளம்பர இல-5030
மே/பா உதயன்,
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (54383)(4.6.3)

## தேவை
வீட்டுப் பணிப்பெண் தேவை. 50 வயதிற்குட் பட்ட வீட்டில் தங்கியிருந்து சிறந்த முறையில் சமையல், துப்புரவு செய்யக்கூடியவர் தேவை. வெளிநாட்டில் வேலைசெய்த அனுபவம் விரும்பத்தக்கது. கவர்ச்சி கரமான சம்பளம் வழங்கப்படும். (சி/ 17858)(5.6.3)
SMS செய்யவும்: 0727 981 200

## வேலையாள்கள் தேவை
* விற்பனைப்பிரதிநிதி (Sales Rep) -ஆண் சாரதி அனுமதிப்பத்திரம் உள்ள Driving தெரிந்தவர்கள்.
* கணினி அறிவும், ஆங்கில அறிவும் உள்ள பெண்கள்.
(சி/17786)(4.6.3) தொடர்பு: 077 201 8275
24.11.2014 காலை 9.30 மணிக்கு நேரில் வரவும்.
சந்நிதி முருகன் வேக் சொப் அன் சேவிஸ்
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

## சொத்து பராமரிப்பாளர் மேற்பார்வையாளர் தேவை
60 வயதிற்குக் குறைந்த ஓய்வுபெற்ற நேர்மையாகவும்,கடினமாகவும் வேலை செய்யக்கூடிய ஒருவர் தேவை. வடக்கு மாகாணத்தில் நகரத்திற்கு அண்மையிலுள்ளவர் விரும்பத்தக்கது.
தொடர்பு:
Unitec Placements (Pvt)Ltd.
67/A, Gregory's Rd, Col -7.
Email : realcommestate@gmail.com
SMS : 072 798 1202 (சி/ 17855)(5.6.3)

# வாடகைக்கு

## வாடகைக்கு
யாழ்தேவி தரித்து நிற்கும் வெள்ளவத்தை ரயில் நிலையத்திற்கு அண்மையில் இல. 8 ரயில் வீதி, வெள்ளவத்தையில் அமைந்துள்ள லொட்ஜில் இணைந்த குளியலறையுடன் கூடிய அறைகள் மற்றும் தனி அறைகள் நாள், கிழமை, மாத வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0112 504 281, 0712 991 256

## வீடு வாடகைக்குண்டு
352/6, இருபாலை வீதி, கோண்டாவிலில் 6 அறைகள், சமையலறை, ஹோல்ஸ் மற்றும் சகல நவீன வசதிகளுடைய வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
(54358)(5.6.3)
தொடர்பு: 077 189 1453

## கோண்டாவிலில் வீடு வாடகைக்கு
கோண்டாவிலில் பொற்பதி வீதியில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலிருந்து இரண்டு மைல் தூரத்தில் பெரிய வீடு பெரிய காணி யுடன் Marble பதித்த குசினி, குளியலறையுடன் வாடகைக்குண்டு. வீடாகவோ, காரியாலயமாகவோ பாவிக்கக் கூடியது.
(54338)(5.6.3)
தொடர்பு: 0779 277 805

## வீடு வாடகைக்கு
286, பலாலி வீதி, கந்தர்மடத்தில் இரண்டு படுக்கையறைகள், இரண்டு குளியல் அறைகளுடன், குசினி, ஹோலுடன் கூடிய மேல் மாடி வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 301 3236 (54443)(5.6.3)

## வீடு வாடகைக்குண்டு
கல்வியங்காடு, செங்குந்த பாடசாலைக்கு அருகில் 5 அறைகள் (2 இணைந்த குளியலறைகள்),2 ஹோல்கள், வாகனத் தரிப்பிட வசதி மற்றும் சகல வசதியும் கொண்ட வீடு.
தொடர்பு: 071 860 5623 (41435)(5.6.3)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

# மணமக்கள் தேவை

## மணமகன் தேவை
1981, சுவாதி 3ஆம் பாதம், 67 பாவம், 7 இல் செவ்வாய் உள்ள யாழ்.இந்து கௌரவ MBBS டாக்டர் மகளுக்கு சாதக பொருத்தமுள்ள டாக்டர் மற்றும் தகுதிவாய்ந்த மணமகன் தேவை. (54397)(5.6.3)
தொடர்பு: 021 222 4696

## மணமகள் தேவை
1982 ஆம் ஆண்டு உத்தரட்டாதி முதலாம் பாதம் நட்சத்திரத்தில் பிறந்த உதயத்துச் செவ்வாய், பிரான்ஸில் வசிக்கும் மணமகனுக்கு தாயார் தகுந்த மணமகளைத் தேடுகிறார்.
தொடர்பு: 077 612 0859 (41403)(4.6.3)

## மணமகள் தேவை
திருவோணம் 3 ஆம் பாதம் 1980இல் பிறந்த, London இல் Engineer ஆக உள்ள மணமகனுக்கு தாயார் தகுந்த மண மகளைத் தேடுகிறார்.
தொடர்பு: 077 612 0859 (41403)(4.6.3)

## மணமகள் தேவை
1981 இல் பிறந்த செவ்.குற்றம் அற்ற பரணி நட்சத்திரம் உடைய மணமகனுக்கு மணமகள் தேவை. (சைவ போசனம் விரும்பத்தக்கது)
தொடர்பு: 0779 296 979 / 0774 11 88 01 (41443)(5.6.3)

## மணமகள் தேவை
யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 27 வயதுடைய தற்போது UK இல் சகோதரி குடும்பத்துடன் PSW விசாவில் உள்ள கொம்பியூட்டர் எஞ்சினியருக்கு UK இல்PR உள்ள யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அழகிய பட்டதாரி மணப்பெண்தேவை. சுவிஸ், பிரான்ஸ், டென்மார்க், நோர்வே, ஜேர்மனி ஆகிய இடங்களில் PR உள்ள UK இல் வந்து வசிக்க விரும்பும் மணப்பெண்ணும் தொடர்பு கொள்ளலாம். மணமகனின் பெற்றோர் ஜனவரியில் UK செல்லவுள்ளதால் மணப்பெண் தொடர்பான விவரங்களை விரைவில் எதிர்பார்க்கின்றனர். (52108)(4.6.3)
தொடர்பு: 077 077 5546, 024 567 1232

## மணமகள் தேவை
நியூஸிலாந்தில் வசிக்கும் மணமகன்மார்களுக்கு நற்குணமுள்ள நல்ல குடும்பத்துப் பெண் தேவை. 23-35 வரை. சீதனம் எதிர்பார்க்கப்படும். சாதி மதம் பார்ப்பதில்லை. உங்கள் போட்டோவையும் முழுவிவரங்களையும், தொலைபேசி இலக்கத்தையும் gmail இல் நம்பிக்கையுடன் அனுப்பி வைக்கவும்.
Sathiyasuresh169@gmail.com
sratnam15@yahoo.com (54447)(5.6.3)

## மணமகள் தேவை
யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1972 இல் பிறந்த அரச உத்தியோகம் பார்க்கும் நல்லொழுக்கமுள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு: 076 668 8104 (41448)(4.6.3)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சில பல திருத்தங்களல்ல முக்கியம் முழு அரசமைப்புமே மாறவேண்டும்

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் ஒரு கட்சியைச் சேர்ந்த இருவர் போட்டியிட்டுக் கொண்ட வரலாறு இல்லை. முதற்றடவையாக இப்போதுதான் அத்தகைய அதிசயம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. போட்டியிலிருந்து எதிர்க் கட்சிகள் ஒதுங்கிக்கொண்டு, சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரையும் பொதுச் செயலாளரையும் தேர்தலில் மோதவிட்டுள்ளன. உலகில் எங்குமே நடைபெற்றிருக்காத வினோதங்களில் ஒன்று இது. அந்த வகையில், இந்தத் தேர்தல் மூலம் மஹிந்த ஆசியாவின் அதிசயங்களில் ஒன்றாக இலங்கையை மாற்றிக் காட்டியிருக்கிறார்.

இந்தப் பரபரப்புகள், களேபரங்களுக்கு மத்தியில் தமிழர் பிரச்சினை, இனப் பிரச்சினைத் தீர்வு என்பன ஒளி மங்கிப் போய்விட்டன. அவை பற்றி எதிரணிப் பொது வேட்பாளர் இப்போதே பேசுவது மஹிந்தவின் வெற்றிக்கு உந்து சக்தியாகிவிடும் என்ற அச்சம் ஒருபுறம் என்றால், சிங்கள பௌத்த இனவாதத்திற்கு வெளியே வாக்குகளை அணி திரட்ட முடியாது என்கிற உண்மை மறுபுறம். எனவேதான், பதவியேற்ற 100 நாள்களுக்குள் அரசமைப்பின் 18ஆவது திருத்தத்தை நீக்குவேன் என்று சூளுரைத்த மைத்திரிபால சிறிசேனவால், 13ஆவது திருத்தம் குறித்தோ கூட்டாட்சிக்குரிய புதிய அரசமைப்புக் குறித்தோ பேச முடியாமல் போய்விட்டது. தேர்தல் முடியும் வரையில் இந்த விடயங்கள் பேசு பொருளாகப் போவதுமில்லை என்பதும் தெளிவு.

தமிழர்களைப் பொறுத்த வரையில் 18ஆவது திருத்தத்தை நீக்குவதன் மூலமும், 17ஆவது திருத்தத்தை மீண்டும் நடைமுறைப்படுத்துவதன் மூலமும் அதையும் தாண்டி 13ஆவது திருத்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்துவதன் மூலமும் கூட நிரந்தரமான தீர்வு அல்லது அமைதி கிட்டிவிடாது என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை. எனவே ஒற்றையாட்சி முறையைக் கொண்ட, 1978 அரசமைப்பை முற்றாக நீக்கி புதிய கூட்டாட்சியை ஏற்றுக்கொள்ளும் புதிய அரசமைப்பு ஒன்று தமிழர்களின் பங்களிப்புடன், ஆதரவுடன் உருவாக்கப்படுவது அவசியம். தமிழர்களின் தாயகம், சுயநிர்ணயம், சுயாட்சியை உறுதிப்படுத்தக்கூடியதாக அந்தப் புதிய அரசமைப்பு இருக்க வேண்டும்.

தற்போதைய அரசியல்களச் சூழலில் தமிழர் தரப்பு இந்த விடயத்தை போட்டியில் குதித்துள்ள இரு தரப்புகளின் முன்பாகவும் வைக்க வேண்டியது அவசியம்.

மைத்திரிபால சிறிசேன போட்டியில் குதித்துள்ளதன் மூலம், மஹிந்தவின் வெற்றி கேள்விக்குறியாகி விட்டதென்னவோ உண்மை. இந்த நிலையில் தமிழர்கள் உட்பட சிறுபான்மையினர் எடுக்கக்கூடிய அரசியல் நிலைப்பாடுகள் இரு வேட்பாளர்களுக்கும் மிக முக்கியமானவை. தமிழர்கள் தேர்தலில் வாக்களிப்பதன் மூலம் மட்டுமல்ல, வாக்களிக்காமல் விடுவதன் மூலமும் ஜனாதிபதியைத் தீர்மானிக்க வல்லவர்கள் என்பது 2005ஆம் ஆண்டிலேயே நிரூபணமாகி இருக்கிறது. இப்போதும் தேர்தல் கள நிலைமை அப்படிப்பட்டதுதான். சிறுபான்மை வாக்குகள் இந்தத் தேர்தலிலும் மிகக் காத்திரமான செல்வாக்குச் செலுத்தப்போவதைத் தவிர்க்க முடியாது.

இந்தப் பலத்தை - சாதக நிலைமையை - முன்வைத்து, இலங்கையின் அரசமைப்பை முற்றாக மாற்றுவதற்கான பேரம் பேசலை தமிழர்கள் முன்னெடுப்பது அவசியம். இப்போதுள்ளதைப் போல அதற்குச் சாதகமான மற்றொரு சூழல் மீண்டும் கனிந்துவரும் என்று எதிர்பார்க்க முடியாது. எனவே கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தைக் கனிய வைப்பதற்கான ராஜதந்திரமே தமிழர்களின் இப்போதைய தேவை.

# வசந்தி அரசரட்ணத்தின் முறைகேடு குறித்து விசாரணை நடத்த வேண்டும்

### நாடாளுமன்றில் சரவணபவன் எம்.பி. வலியுறுத்து

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தராகத் தற்போது பதவி வகிக்கும் வசந்தி அரசரட்ணம், மருத்துவ பீடாதிபதியாக இருந்த சமயத்தில் மேற்கொண்ட - கணக்காய்வாளர் நாயகத்தினால் முறைகேடானதாக கொள்ளத்தக்கது எனக் குறிக்கப்பட்ட - கணினி வலையமைப்புக்கான உபகரணக் கொள்வனவு குறித்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் விசாரணை நடத்தவேண்டும் என்று நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரணவணபவன்.



வரவு - செலவுத் திட்டத்தில் உயர் கல்வி அமைச்சு மீதான ஒதுக்கீட்டு விவாதத்தில் பேசிய அவர் இது தொடர்பில் தெரிவித்ததாவது:

இந்த வரவு - செலவுத்திட்டம் பல்கலைக்கழகங்களுக்கான மூலதனச் செலவினங்களை அதிகரித்துள்ளது. எனினும், புதிய திட்டங்களில் நாம் காலடி எடுத்து வைப்பதற்கு முன் ஏற்கனவே ஆரம்பித்த திட்டங்களைச் சரியாக வழிப்படுத்த வேண்டும். 1980, 1990களில் முன்னெடுக்கப்பட்ட - ஒருங்கிணைக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரிகள் திட்டம் புதிய பல்கலைக்கழகங்கள் உருவாக வித்திட்டன. அதில் ஓரளவு வெற்றியும் கிடைத்தது. பேராதனை; களனி மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரிகளாக இருந்து முழுநேரப் பல்கலைக்கழகங்களாக மாறின. எனினும், திருகோணமலை பல்கலைக்கழக கல்லூரி இன்னும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகமாகவும் வடமாகாண ஒருங்கிணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி இன்னும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் வவுனியா வளாகமாகவும் செயற்படுகின்றன.

இந்தத் தோல்விக்கு அவற்றின் மூலப் பல்கலைக்கழகங்களே காரணமென நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இந்த வளாகங்கள் மூலப் பல்கலைக் கழகங்களின் பதுமைகளாகவே கருதப்படுகின்றன. தங்கள் கல்லூரி முதல்வர் சட்டக்கல்வியைப் பயில்வதற்காக வாராவாரம் கொழும்புக்குச் சென்று விடுவதைக் கண்டித்து திருகோணமலை வளாகத்தின் மாணவர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு காரியாலயத்தின் முன் கண்டனப் போராட்டம் ஒன்றை நடத்தினார்கள். வவுனியா கல்லூரியைப் பொறுத்தமட்டில் அதன் முதல்வர்கள் அனைவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். தொழிலுக்காக அவர்கள் தங்களது யாழ்ப்பாண வசிப்பிடங்களை மாற்றிக் கொள்வதற்குக்கூட விரும்பாதவர்கள். தங்களது நினைவுகளை யாழ்ப்பாணத்தில் உள்ள குடும்பத்தினரிடம் விட்டுவிட்டு வவுனியாவில் ஒப்புக்காகத் தொழில்புரிபவர்கள்.

வவுனியாவின் உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் எப்போதும் யாழ். பல்கலைக்கழகப் பட்டதாரிகளைக் கொண்டே நிரப்பப்படுகின்றன. அபூர்வமாகவே யாழ்ப்பாணத்துக்கு வெளியில் உள்ள வவுனியா பட்டதாரிகளுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கின்றது. 18 வருடங்களாக வவுனியா மாணவர்கள் வவுனியா நகரில் வாடகை வீடுகளில் இருந்த வகுப்பறைகளில் கல்வி கற்று வந்தமை எனக்கு ஞாபகத்தில் இருக்கிறது. அங்கு கழிவறை வசதிகள் இல்லாத காரணத்தினால் அந்த மாணவர்கள் அயலில் இருந்த மரங்களுக்குப் பின்னால் சென்று தங்கள் இயற்கைக் கடன்களைக் கழிக்க வேண்டிய அவலநிலை இருந்து வந்தது.

நாடாளுமன்றில் உயர் கல்வி தொடர்பான விடயங்களை ஆராயும் COPE அமைப்பு வவுனியா வளாக முதல்வர் மற்றும் உபவேந்தரைக் கடுமையாக விமர்சிக்கப்பட்டதன் பின்னர், அந்த வீடுகளில் இருந்து வெளியேறி பம்பைமடுவில் புதிய கட்டங்களை அமைத்து குடியேற 2005ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இன்றும், 2014இல், அந்தச் செயற்றிட்டம் தொடர்கின்றது. ஆனால் இடமாற்றம் இன்னும் பூரணப்படுத்தப்படவில்லை. வீடுகளை விட்டு வெளியேறுவதற்குக் காட்டப்படும் தயக்கம் குறித்து ஆணைக்குழு ஒருவேளை விளக்கக்கூடும். கலாநிதிப் பட்டம்கூட இல்லாத, யாழ். பல்கலைக்கழகத்தில் இணைப் பேராசிரியராகக்கூட தன்னை ஆக்கிக் கொள்ள முடியாமல்போன, வவுனியா வளாகத்தின் இன்றைய முதல்வரே அந்த வளாகத்தைக் கட்டியெழுப்புவதற்காக அனுப்பப்பட்டிருக்கிறார்.

பிரச்சினைகளில் மற்றொன்று யாழ். பல்கலைக்கழக நிதி ஒதுக்கீடுகளில் வவுனியா வளாகத்துக்கென தனியான ஒதுக்கீடுகள் எவையும் இல்லை என்பதாகும். வவுனியா வளாகத்திற்கான செலவினங்களும் ஒரே நிதி ஒதுக்கீடுகளில் காட்டப்படும்போது அதுவும் யாழ்ப்பாணத்துக்கே செலவிடப்படகின்றது. அமைச்சரும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினரும் இந்த விடயத்தில் தலையிடமாட்டார்கள். ஏனெனில், உபவேந்தர் அவர்களது ஏவலாளி. அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுபவர்.

இதில் நான் ஒரு குறிப்பிட்ட சாயலைக் காண்கிறேன். எல்லாப் பல்கலைக்கழகங்களுக்கும் பலவீனமான உபவேந்தர்களையே அரசு நியமிக்கின்றது. அவர்கள் அரசின் பிடியில் உள்ளனர். உதாரணத்துக்கு யாழ். உபவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணத்தை எடுத்துக்கொள்வோம். யாழ். பல்கலைக்கழகத்துக்கு அவர் கணினிகள் கொள்வனவு செய்ததில் முறைகேடுகள் நடந்துள்ளன என்பது கண்கூடு. கணக்காய்வாளர் நாயகம் தனது 2004 ஜூன் 8ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் அப்போதைய் உபவேந்தரும் மேலதிக பேராசிரியருமான எஸ்.மோகனதாஸிடம் இந்த விடயம் தொடர்பில் கேள்வி எழுப்பியிருக்கிறார். அந்தக் கணக்காய்வு விசாரணைக் கடிதத்தை நான் இங்கு சமர்ப்பிக்கிறேன்.

இணைப் பேராசிரியர் மோகனதாஸ் இப்போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கிறார். அவர் இரசாயனப் பேராசிரியர் என ஆணைக்குழு தனது இணையதளத்தில் உண்மைக்குப் புறம்பாகப் பட்டியல் இட்டுள்ளது. அவர் அதிகம் நாடப்படாத விவசாய இரசாயனத்தில் இணைப் பேராசிரியராக இருந்தாரே தவிர, இரசாயனப் பேராசிரியராக ஒருபோதும் இருந்ததில்லை. தனக்கு கடமையுணர்வு கொண்ட சேவகர்களாக நடந்துகொள்வதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து தகுதியற்றவர்களையே நியமிக்கும் வழக்கமான தனது செயலை - விவரத்தை - மறைக்க பொய்யான இணையத் தரவுகள் மூலம் அரசு செய்யும் தகிடு தத்தமே இது.

"மருத்துவ பீடத்துக்கு கணினி வலையமைப்பு வசதியைப் பெற்றுக்கொள்வதற்காக பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் செய்த அங்கீகாரமற்ற கொடுப்பனவு" தொடர்பாகவே இணைப் பேராசிரியர் மோகனதாஸிடம் கணக்காய்வாளர் நாயகம் விளக்கம் கோரியிருந்தார். (அவரது குறிப்பு இலக்கம் NE/ JF/ A/ JU/-2004) உதவி கணக்காய்வு நாயகம் எஸ்.சிவகுரு தனது சார்பில் கையொப்பம் இட்டிருந்த அந்தக் கடிதத்தில் கணக்காய்வு நாயகம் தெரிவித்திருந்தவை வருமாறு:-

"மருத்துவ பீடாதிபதி (இப்போது அந்தப் பதவியில் இருந்தவர் வசந்தி அரசரட்ணம்) .........கொள்வனவு நியதிகளையும் நியமங்களையும் மீறியுள்ளார்....... பீடாதிபதி ஒருவரின் கொள்வனவு எல்லை ஒரு லட்சம் ரூபாவாக இருக்கும்போது அவர் மொத்தமாக 30 லட்சம் ரூபாவுக்கு கொள்வனவைச் செய்துள்ளார். வழங்கப்பட்டிருந்த நிதியின் அளவு 9 லட்சத்து 63 ஆயிரம் ரூபாவாக இருந்தபோதும் 30 லட்சம் ரூபாவுக்கான கொள்வனவுக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது."

"கேள்வி அறிவித்தல்களோ விலை மனுக் கோரல்களோ மேற்கொள்ளப்படவில்லை."

".........மேற்சொன்ன நிறுவனம் குறிப்பிட்டிருந்த விலைகள்..."

அது டெல்வன் கணினி தனியார் நிறுவனம்.

"........கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டதன் பேரில் மூலத்திலிருந்து அரைவாசியாகக் குறைக்கப்பட்டுள்ளன. விலைகள் அளவுக்கதிகமாக, உச்சமாக முதலில் போடப்பட்டிருந்தன என்பதையே இது காட்டுகிறது."

"கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் அனைத்துமே பொருத்தப்படவில்லை."

"எனவே அந்த முழுக் கொள்வனவும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது..... முறைகேடான, அங்கீகரிக்கப்படாத, பயனற்ற கொள்வனவு என்று கொள்ளப்படத்தக்கது."

இந்த விவகாரம் தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் முழுமையான விசாரணைகளை நடத்தி, வசந்தி அரசரட்ணத்தின் கைகள் தூய்மையானவை - கறைபடியாதவை - என்று நிரூபிக்கும்படி நான் கோருகின்றேன்.

# நித்திய சுகத்தை நோக்கி...

உதயன் வைத்தியமலர் 194

## குறைமாதப் பிள்ளைகள்




உலகளாவிய ரீதியில் கிட்டத்தட்ட 15 மில்லியன் கணக்கிலான குறைமாதப் பிள்ளைகள் வருடந்தோறும் பிறக்கின்றவேளை, ஒரு மில்லியனுக்கும் அதிகமானவர்கள் ஒரு வயது பூர்த்தியாக முன்னரே இறந்துவிடுகின்றனர். "குறைமாத பிரசவம்" பற்றிய விழிப்புணர்வை உண்டாக்குவதே இவ்வாறான சிசுக்களின் இறப்பு வீதத்தைக் கட்டுப்படுத்துவதற்கு மருத்துவத் துறையினர் மேற்கொள்ள வேண்டிய முதலாவது செயற்பாடாகும். உலகளாவிய ரீதியில், நவம்பர் மாதமானது "குறைமாதப்பிரசவம்" பற்றிய விழிப்புணர்வு மாதமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் நவம்பர் 17 ஆம் திகதி இதற்குரிய விழிப்புணர்வு தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. முதலாவது விழிப்புணர்வு தினமாக ஐரோப்பிய பெற்றோர் அமைப்பினால் (E. P.O) இனால் 2008 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

பொதுவான கர்ப்பகாலம் 40 கிழமைகள் எனக் கொள்ளப்படுகிறது. ஒரு தாயின் கர்ப்பத்தில் 37 கிழமைக்கு முன்னதாக பிரசவம் நிகழ்ந்து பிறக்கும் குழந்தை, குறைமாதப் பிள்ளை எனக் கொள்ளப்படுகிறது. இவ் வகையான பிரசவம் மேலும் வகைப்படுத்தப்படுகிறது. அதாவது, 22-27 கிழமைகளிலான பிரசவமானது மிகவும் அதிதீவிரமாகவும், 28-32 கிழமைகளிலான பிரசவமானது அதிதீவிரமாகவும், 33-36 கிழமைகளிலான பிரசவமானது தீவிரமாகவும் கணக்கெடுக்கப்படுகிறது.

குறைமாதப் பிரசவம் பல்வேறு பட்ட காரணிகளால் நிகழ்கிறது. பெரும்பாலான பிரசவங்கள் (45-50 வீதம்) காரணமல்லாததாகவும், 30வீதம் ஆன பிரசவங்கள் முதிர்ச்சியடைய முன் சிசுவைச் சூழவுள்ள மென்சவ்வு வெடிப்பதாலும் (பன்னீர்க் குடம் உடைதல்என பேச்சு வழக்கிலுண்டு) மீதி 15-20 வீதம் ஆன பிரசவம் மருத்துவ ரீதியான நிபந்தனையைப் பூர்த்தி செய்வதற்காகவோ (சிசுவுக்கு அல்லது தாய்க்கு உயிரா பத்து நிகழப் போகும் பட்சத்தில்) நிகழ்கிறது அல்லது நிகழ்த்தப்படுகிறது. மேலும் தாயின் வயது (18 இலும் குறைவு மற்றும் 35 இலும் அதிகம்) தாயின் ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கம், முன்னைய குறைப் பிரசவ நிகழ்வு, தாய் கர்ப்பவதியாய் இருக் கும் போது காணப்பட்ட அசாதாரண நிலைகளை (இனப்பெருக்கத் தொகுதி கட்டமைப்பு பிறழ்வுகள், சலரோகம், உயர் குருதியமுக்கம், பல்பெருக்க கர்ப்பங்கள்,மன உளைச்சல், அதிகூடிய உடல் உழைப்பு, புகை பிடித்தல் அல்லது மதுவருந்தும் பழக்கம்) மற்றும் பரம்பரை போன்ற காரணிகளும் இந்தக் குறைப் பிரசவத்துக்கு காரணமாகிறது. மேற்கூறிய ஒவ்வொரு காரணமும் ஏதோவொரு குறிப்பிட்ட சதவீதத்தால் இந்த வகைப் பிரசவம் சம்பவிப்பதில் செல்வாக்கு செலுத்துகிறது. உதாரணமாக வெளிநாடொன்றில் செய்யப்பட்ட ஆய்வொன்றில், பதின்ம வயதினர் கர்ப்பவதிகளில் 98வீதம் ஆனவர்கள் குறைமாத பிரசவ நிலையை எதிர்கொள்கின்றனர்.

இவ்வகைப் பிரசவத்தில் பிறக்கும் குழந்தைகள் சீரற்ற உடல் வெப்ப நிலை, சுவாசம் சார் குறைபாடுகள், மஞ்சட்காமாலை, பால்குடிக்க இயலாமை, வலிப்பு, தொற்றுநோய் கள், அடிக்கடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்படல் போன்ற பல் வேறுபட்ட சிக்கல்கள் உடையவரா யிருப்பர். இந்தச் சிக்கல்கள் யாவும் சிசுவின் உடல் அங்கங்களின் கட்டமைப்பு மற்றும் தொழிற்பாடுகள் முதிர்ச்சியடையாத் தன்மையா லேயே நிகழ்கிறது. விசேட குழந்தை நல பராமரிப்பு அலகில் இவ்வகையான சிசுக்கள் அனுமதிக்கப்பட்டு குழந்தை நல வைத்தியரால் உரிய மருத்துவமும் அச் சிசுவின் பெற்றோர் அல்லது பாதுகாவலருக்கு ஆலோசனைகள் வழங்கப்படுவதை பொதுவாக வைத்தியசாலைகளில் காணக் கூடியதாயுள்ளது. அதற்கும் மேலாக வீடுகள் மற்றும் சமுதாய மட்டத்திலும் இந்தச் சிசுக்களின் சுகாதார விருத்திப் படிமுறைகளில் உரிய மருத்துவ தேவைகளை விஸ்தரிப்பதற்கு வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் பொது சுகாதார உத்தியோகத்தர்கள் முன்னிற்கின்றனர்.

இந்த வருடத்துக்கான விழிப்புணர்வுத் தினத்தின் போது உலக சுகாதார ஸ்தாபனம் தாய் மற்றும் சிசுவுக்குரிய தேவைகளாக பின் வருவனவற்றைவிளக்கியிருந்தது.

- ♦ குறைமாதப் பிள்ளையின் நுரையீரல் தொழிற்பாட்டை முதிர்ச்சியடையச் செய்ய steroid injection கர்ப்ப காலத்தின் போது வழங்குதல்.
- ♦ சிசுவை தாயின் உடம்போடு அரவணைத்தபடியே இருத்தல் மூலம் குழந்தையின் உடல் வெப்பநிலையை சீராகப் பேணல் (கங்காரு தன் குட்டியை தன் உடம்பிலே காவிச் செல்வது போல்)
- ♦ அடிக்கடி தாய்ப்பாலூட்டல் (பிறந்த குழந்தைக்கு தாய்ப்பாலை விட சிறந்த ஆகாரம் எதுவுமில்லை) தொற்று நோய்களுக்கெதிராக எதிர்ப்பு மருந்துகள் அளித்தல்.

ஆகவே, தமக்குக் குறைமாதப் பிரசவம் சம்பவிக்கப் போகிறது அல்லது குறைமாதப்பிள்ளை பிறந்து விட்டாலோ அதற்குரிய மருத்துவ தேவைகளையோ, ஆலோசனைகளையோ பெறுவது எல்லா பெற்றோருக்கும் மற்றும் அந்தக் குழந்தையின் பாதுகாவலருக்கும் உரிய மறுக்கப்படாத உரிமையாகும்.

சி. சஸ்ரூபி
B.sc.Nursing

---

"எனக்கு இரவில் துண்டாய் நித்திரையில்லை, படுத்து அங்காலையும் இஞ்சாலையும் உருண்டு கொண்டிருப்பன். உடன விடிஞ்சிடும் பேந்தென்ன, பகலெல்லாம் ஒரே சோர்வாய்க் கிடக்கும் என்னெண்டு வேலை செய்யிறது..."

"எனக்குச் சும்மா ஐந்து வருடமாக நித்திரையில்லை. கண்ணிமை மூடுறதேயில்லை. வாழ்க்கை வெறுத்துப் போச்சு நித்திரையில்லாமல் என்னெண்டு இருக்கிறது"

"நிம்மதியாய் நித்திரை கொள்ளுவம் எண்டு படுத்தா அது வந்தாத்தானே; படுத்து நீட்டிநிமிர்ந்து கிடக்கிறது தான் ஒருகண் நித்திரையில்லை"

இப்படிப் பல கூற்றுக்களை எங்கள் செவிகளால் நாம் அடிக்கடி கேட்கக் கூடியதாக இருக்கும்.... கேட்டிருப்போம் அல்லது நாங்களே இப்படியான கூற்றுக்களைக்கூறும் நபராக இருப்போம்.... என்ன.. எங்களுடைய பிரச்சினையை இவர் என்னெண்டு தெரிஞ்சு சொல்லுறார் எண்டு யோசிக்கிறீங்களா? அது ஒண்டும் பெரிய விடயமல்ல. உலகத்தில பெருமளவான ஆள்களுக்கு நித்திரைக்குழப்பம் இருக்கு எண்டு ஆய்வுகளில் சொல்லப்பட்டிருக்கு. இது ஒரு பொதுவான பிரச்சினை. எனவே இந்தப் பிரச்சினைக்கு உட்பட்டு வெளிவந்தவர்களாகவோ அல்லது உட்பட்டு உள்ளவர்களாகவோ நாங்கள் இருப்பது இயல்பானது. இந்தப் பொதுவான பிரச்சினையைத் தங்களுடைய எதிர்மறையான எண்ணங்களால் - நினைப்புகளால் தங்களுக்குரிய சிறப்பான பிரச்சினையாக மாற்றுபவர்களும் இருக்கின்றார்கள். தாங்களே பின்னும் வலைக்குள் தாங்களே சிக்கிக் கொள்ளும் அப்பாவிகள் அவர்கள்.

உறக்கம் - தூக்கம் எமக்கு அவசியமான ஒன்று. அது எமது உடலுக்கும் உளத்துக்கும் ஓய்வு கொடுக்கிறது. இந்த ஓய்வின் மூலம் உடல் தன்னைப் புத்துயிர்ப்புச் செய்து கொள்ளுகின்றது. எனவே எமது வாழ்க்கையில் தூக்கம் முக்கியமான ஓர் இடத்தைப் பிடிக்கிறது. எமது ஆயுள் 100 வருடங்கள் என வைத்துக் கொண்டால் நாம் 25 வருடங்கள் தூக்கத்தில் கழிக்கிறோம். பகலெல்லாம் பாடுபட்டு வேலை செய்யும் எமக்கு ஓய்வுகொள்ளுவதற்காக உறக்கம் கிடைத்திருக்கின்றது. அது எமது அதிர்ஷ்டம். ஆனால் அந்த அதிர்ஷ்டத்தை நாம் பல இரவுகள் தவற விட்டிருப்போம்.

மனிதர்களாகப் பிறந்த எல்லோரும் தமது வாழ்நாளில் ஒரு நாளோ அல்லது இரண்டு நாளோ இந்த அதிர்ஷ்டத்தை - தூக்கத்தைத் தவற விடுகின்றனர். ஆனால் சில தவறவிட்ட நாளை எண்ணியபடி இன்றைக்கும் தவறவிட்டு விடுவோமோ அல்லது நாளைக்கும் இப்படித்தான், இது அகப்படாமல் போகப் போகிறதோ என்ற கவலையால், வெறுப்பால் இன்றைக்கு எப்படியாவது அதிர்ஷ்டத்தை - தூக்கத்தை அடைந்தே தீர்வது என்ற நினைப்போடு, முனைப்போடு படுக்கைக்குப் போகின்றனர். அது தவறிவிடுகின்றது. ஒரு உதாரணம் மூலம் இதை விளங்கிக் கொள்வோம். சிவராத்திரி விரதத்தை எடுத்துக் கொள்ளுவோம். அன்றையநாள் நித்திரை முழித்திருக்க வேண்டும் என்பது விதி. நித்திரை முழித்திருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் நித்திரை முழிப்பதற்குரிய முயற்சிகள் பலவற்றை நாங்கள் செய்வோம். ஆனால் அன்றைய இரவு எங்களுக்கு நித்திரைத் தூக்கம் மிகுதியாக உண்டாகும். நித்திரை செய்ய வேண்டும் என்ற, நித்திரையை நோக்கிய தேடல் எமக்கு அதனைத் தருவதில்லை. அதற்கு எதிரான நித்திரை கொள்ளாமல் இருக்க வேண்டும் என்ற தேடலும் - எண்ணமும் அதற்கான முயற்சியும் எமக்கு நித்திரையை உருவாக்குகின்றது. எனவே நித்திரை செய்ய வேண்டுமா? அதைத் தேடுவதை நிறுத்துங்கள். தேடுவது கிடைக்கும்.

இதனை விடத் தூக்கத்தைத் தடுக்கும் காரணிகள் பல இருக்கின்றன. அவற்றை உடலியல் சார்ந்த காரணிகள், உளவியல்சார் காரணிகள் என இருவகைக்குள் அடக்கலாம். மேலே சொல்லப்பட்ட காரணம் உளவியற்காரணிக்குள் அடங்கும். எமது சூழலில் ஏற்படும் நெருக்கீடுகள் எமது மனத்தில் ஏற்படுத்தும் எதிர்மறையான எண்ணங்களால், உணர்வுகளால் எமது தூக்கம் தொலைந்து விடுகின்றது. குறிப்பிட்ட அந்த நெருக்கீடுகளில் இருந்து விடுபடும் போது தூக்கம் இயல்பாகி விடுகின்றது.

முசுகுந்தச் சக்கரவர்த்தி என்ற அரசர் (இந்தக் கதை புராணங்களில், இதிகாசங்களில் வருகின்றது) தனது நாட்டைச் சிறப்பாக ஆட்சி புரிந்து வந்தார். அவர் முகம் குரங்கின் முகமாக இருந்ததால் அவர் முசுகுந்தச் சக்கரவர்த்தி (முசு-குரங்கு) என அழைக்கப்பட்டார். (முகம் ஏன் குரங்கினுடையதாக இருந்தது என்பதற்கும் கதையிருக்கிறது. புராணங்களில் கண்டு கொள்க) அவர் மிகுந்த பலவான். ஒரு சமயம் இந்திரன் தனக்கு அசுரர்கள் ஏற்படுத்தும் துன்பத்தைப் பொறுக்க மாட்டாமல் அதனை வெல்வதற்கு முசுகுந்தச் சக்கரவர்த்தியின் உதவியை நாடுகின்றான். இவரும் அதனை மறுக்காமல் இந்திரனுடன் சென்று அவனுக்கு உதவியாக நின்று பல நாள்கள் அசுரர்களோடு போர் செய்கிறார். போர் முடிந்தது. இவர் தனது நாட்டுக்குப் புறப்படுகின்றார். இந்திரன் இவருக்குப் பல சன்மானங்களைக் கொடுத்து வரம் ஏதும் கேட்கும் படி கேட்டுக் கொள்ளுகின்றான். அதற்கு இவர் இங்கு வந்ததில் இருந்து நான் உறங்கவில்லை. அதனால் நான் கொஞ்சம் அமைதியாக உறங்க வேண்டும். அதை ஒருவரும் தொந்தரவு செய்யாமல் இருக்க வரம் தரவேண்டும் என்று கேட்க, இந்திரன் அந்த வரத்தைக் கொடுத்து தங்கள் நித்திரையை யாராவது குழப்பினால் நீங்கள் விழித்து அவனைப் பார்த்த கணமே அவன் எரியுண்டு போவான் என்று சொல்லுகிறான். அவர் விடை பெற்றுக்கொண்டு சென்று ஓர் அமைதியான ஆள்கள் அரவமற்ற இடத்தில் உள்ள மலைக் குகை ஒன்றில் படுத்து நித்திரை கொள்கின்றார்.

கிருஷ்ணனுக்கு ஒரு பகைவன். அவன் பல வருடகாலமாக அவருக்குத் தொல்லை கொடுத்து வந்தான். அவனைக் கொல்ல அவரால் முடியவில்லை. காலம் பார்த்துக் கொண்டிருந்தார். இம்முறையும் அவன் பெரும் படையோடு வந்து தாக்குகின்றான் கிருஷ்ணர் அவனிடம் தோற்றுத் தப்பி ஓடுபவர் போல ஓடுகிறார். ஓடி முசுகுந்தச் சக்கரவர்த்தி படுத்திருக்கும் இடத்துக்கு வருகின்றார். வந்து அந்தக் குகைக்குள் புகுந்து ஒளித்துக் கொள்ளுகின்றார். பின் தொடர்ந்து வந்த பகையரசன் குகைக்குள் நுழைகின்றான். அங்கு ஒருவர் படுத்திருப்பதைப் பார்க்கிறான். கிருஷ்ணர் தான் மாறுவேடத்தில் படுத்திருப்பதாக எண்ணிக் காலால் உதைக்கின்றான். முசுகுந்தச் சக்கரவர்த்தி திடுக்கிட்டு எழும்பி அவனைப் பார்க்கிறார். அவன் எரிந்து போகின்றான். பின்னர் கிருஷ்ணர் அவர் முன்வந்து நடந்ததைச் சொல்லுகின்றார். அதிக காலம் தான் உறங்கி விட்டதாக அவர் உணர்கின்றார். கிருஷ்ணரை வணங்குகின்றார். இப்படி அந்தக் கதை செல்லுகின்றது.

இதையேன் இங்கு சொன்னேன். புராணத்தின் அம்சங்களை, அற்புதங்களை எல்லாம் விட்டு ஒரு கதையாகப் பார்த்தால் நாம் மேலே சொன்ன விடயங்கள் இங்கு பொருந்தியிருப்பதை நீங்கள் கண்டு கொள்ளுவீர்கள். எப்படி...? முசுகுந்தச் சக்கரவர்த்தி இந்திரனுக்கு உதவச் சென்று ஒரு போர்ச் சூழலில் நெருக்கீட்டுக்கு மத்தியில் வாழவேண்டி நேர்ந்தது. அவர் கூறுகின்றார், போர் வேளையில் என்னால் உறங்கமுடியவில்லை. ஆனால் அவர் உறங்கியிருப்பார். இந்தப் போரை வென்று எப்படியாவது இந்திரனைக் காப்பாற்றவேண்டும், தனது கடமையை நன்கு முடிக்க வேண்டும் என்ற எண்ணம் அவரது உறக்கத்தைப் பாதித்திருக்கும். இது கருமமே கண்ணாயினார் நிலை. இதனால் உறங்கினாலும் உறங்கியதாக அவரால் உணர முடியவில்லை. எங்கள் வாழ்க்கையில் இதனை நாம் அனுபவித்திருப்போம். போர் முடிந்தது. நெருக்கீடு தீர்ந்தது. உறக்கம் வந்தது வரம் கேட்ட போது என்னை நிம்மதியாக உறங்க விடுங்கள் என்ற தொனியில் உறக்கத்தை குழப்பாமல் இருப்பதற்கு வரம் கேட்கிறார். நெடுக்கீடுகளுக்குள் சிக்கியிருந்து அது விடுபட்டதும் வரும் ஆனந்தமான உறக்கத்துக்கு இணையாக உலகத்தில் வேறு என்ன இருக்கிறது.

இப்படி ஒருவருடைய வாழ்க்கை நெருக்கீட்டுக்கு உட்பட்டிருக்குமானால், அவர் உறக்கத்தில் நித்திரையில் பிரச்சினை ஏற்பட்டு விடுகின்றது. அவர் சிறிதேனும் உறக்கம் கொள்வதில்லை என்பதைவிட, தான் மேற் கொள்ளும் உறக்கத்தால் திருப்தி அடைவதில்லை. இதனால் தொடக்கத்தில் சொல்லியது போல் எனக்கு 5 வருடங்களாக நித்திரையில்லை போன்ற கூற்றுக்கள் வெளி வருகின்றன.

இவற்றை வெல்ல என்ன செய்வது என்ற கேள்வி எல்லோர் மனதிலும் எழுவது இயல்பே. அதற்கு ஓர் எளிமையான வழி ஒன்று இருக்கின்றது. அது என்ன? அதுதான் சாந்தியாசனப் பயிற்சி. இதனைத் சவாசனம். தளர்வுப் பயிற்சி என்றும் அழைப்பர். யோகாசனம் செய்தபின் இறுதியில் செய்யப்படும் பயிற்சியாக இது விளங்குகின்றது. இந்தப் பயிற்சி எமது மனத்தையும் உடலையும் எப்போதும் விழிப்பு நிலையில் (உசார்) வைத்திருக்க உதவுகின்றது. இதனை நல்ல முறையில் பயில்வதன் மூலம் எமக்கு ஏற்படும் நெருக்கீடுகளில் இருந்தும் பதகளிப்பில் இருந்தும் எம்மைப் பாதுகாப்பதுடன் நிம்மதியான உறக்கத்தையும் பெற்றுக் கொள்ள முடியும்.

## தூக்கம் உன் கண்களைத் தழுவட்டுமே



நா. நவராஜ்.
உளநலப் பிரிவு.

# சாவைத் தோளில் தாங்கி வாழ்ந்தோர் நினைவு-3

அனலி

அது ஓர் எழில் தேசம். காலெரி சாலவன் காலம். மனுக்குல வாழ்வுப் பாதையின் ஒரு சிறப்பான நடைப் பதிவு அது. காத்திரமானவைகளுக்கு இருப்பது போல அதற்கும் ஒரு தனி வரலாறு உண்டு. அது நீண்டு நிலைத்தது. அங்கு உருவான ஆத்மார்த்தமான வழிபாட்டு முறை ஆழமானது. அர்த்தம் செறிந்தது. வழிபாட்டிடம், வழிபாட்டுமொழி, வழிபாட்டுப் பாரம்பரியம், வழிபடுவோர் என சிறந்த கட்டுருவாக்கத்தைக் கொண்டது. அர்ப்பணிப்பு, தியாகம் என்பது கைம்மாறு, பிரதியீடுகளுக்கு அப்பாற்பட்டது. தெய்வீகத் தன்மை கொண்டது. இதனால் வழிபாட்டுக்கு போற்றுதற்குரியதாகிறது. இவ்வகையிலேயே வழிபாடு முகிழ்ப்புப் பெற்றது. பரந்த பிராந்தியத்தில் மக்கள் வாழ்கின்ற பெரும்பகுதிகள் ரீதியாக காலமும் தேவையும் இணைந்து அமைத்துக் கொண்ட பதினைந்துக்கு மேற்பட்ட ஈகையர் வழிபாட்டிடங்கள் மக்களின் நினைவுப் பொக்கிஷங்களை சுமந்த பெட்டகங்களாய் அமைந்தன.

லேசான பனிக்குளிரும், மழைக்குளிரும் கலந்த மாதம். மழையின் பொழிவு விஞ்சி நிற்கும் வருடத்தின் அதிக மழைக்காலம். இந்த மாதத்தில் தான் அந்த பெருவழிபாடு நடைபெறும். மப்பு, மந்தாரம், தூறல், பொழிவு என மாறி மாறி வருணதேவன் ஜாலங்கள் காட்டும் தருணங்கள் நிறைந்திருக்கும். இதனால் மண்மாதா குளிர்ந்து, இயற்கை சிலிர்ப்பது ரம்மியமானது. இவைகளுக்கு மத்தியில் பூமித் தாய்க்கு பொட்டிட்ட புனித வழிபாட்டிடங்கள் புதுமெருகு பெறும். வழிபாடுகள், ஆராதனைகள் சிறப்பாக நடந்தேறும். இது இந்திரவிழாவல்ல. இரவைப் பகலாக்கும் சூரிய விழாவேதான். ஆராத னைக்கு இரு



கிழமைகளுக்கு முன்னதாகவே வழிபாட்டிட சுத்திகரிப்பு பணிகள் தொடங்கி விடும். புல் பூண்டு பிடுங்குதல், மரங்கள் கத்த ரித்தல், பாதைகள் சீரமைத்தல், மண் பரவுதல், வர்ணம் பூசுதல், வளைவு கட்டுதல் என இன்னும் பல அந்தந்த இட வழிபடுவோர் குழுவினரால் விரைந்து செய்து முடிக்கப்படும். மேலும் அந்த நாள்களில் நாடு, நகர், வீடு, வீதி விசேட அழகு பெறும். உறைவிடங்கள், விசேட அமைவிடங்கள் என்பவற்றிலும் வழிபாடுகள் இயற்றப்படும். ஆராதனைப் பாடல்கள் ஒலிக்கப்படும்.

ஆரம்ப காலங்களில் ஒளி நாளின் முதல் மணித்துணிகள் ஆராதனைக்குரியனவாக கடைப்பிடிக்கப்பட்டன. சில காலங்களில் பின்பு முதன் முதலான ஈகைப் பொழுது வணக்கத்துக்குரிய வேளையாக்கப்பட்டது. இங்கு பூசைகள் செய்யப்படுவதில்லை. கிலுக்குமணி ஒலிப்பதில்லை. மலர்களாலும், சுடர்களாலும், மக்கள் பிரார்த்தனைக் கண்ணீராலும் மண் நிறையும், பூக்களுக்கான கேள்வி கூட அன்று மிக அதிகமாயிருக்கும். பெரும்பாலானவை மாலைகளாகி மாண்புடை நினைவடையாளங்களை அணைக்கும், மிகுதியானவை அதிர்ச்சிக்கு உட்படும். மாதத்தின் சிறப்பு மலரும். ஆராதனையில் தன்னை இணைக்கும்.

பல இடங்களிலிருந்தும் சாரி, சாரியாக வரும் மக்கள் வழிபாட்டு இடங்களை நிறைத்து நிற்பர். உரிமை, முதன்மை குரு வழங்கும் வருடாந்த நற்சிந்தனைக் கருத்தை எதிர்பார்த்து உள்ளும், வெளியும், எல்லை கடந்தும் காத்திருக்கும் உள்ளங்களின் ஆவல் நிறைவடைய ஆசானின் பேச்சொலிக்கும். அழுத குழந்தையும் பொழிந்த மழையும் கூட நிறுத்தி அதனை அவதானிக்கும். தொடர்ந்து முதன்மைக்குரு (வழிபாட்டிடமொன்றில்) அதிமுதன்மைத் தீபமேற்ற, அனைத்து வழிபாட்டு இடங்களிலும் விசேட/ சிறப்பு குரவர்கள் முதன்மைத் தீபங்களேற்ற, ஏககாலத்தில் மக்கள் அனைவரும் தம்முன்னால் இருக்கும் நினைவிடங்களுக்கு ஒளியேற்றி கண்ணீர் மல்கி, மனமுருகி, மெய்பதபறி வழிபடுவர். ஒளி வெள்ளம் திக்கெங்கணும் பரவும். அப்போது ஒவ்வொரு கொடைப்பதிப்பின் போதும் ஒலிக்கும் அந்த உன்னதமான ஒற்றைப் பிரார்த்தனைப் பாடல் எல்லாக் கொடையர்களினதும் நினைவை மீட்டி காற்றினில் பரவும். அற்புதமான அந்தப் பொழுதை வரிவடிவங்களுக்குள்ளோ வார்த்தைகளுக்குள்ளோ அடக்க முடியாது. உயிரினில் உணர மட்டுமே முடியும். மெய் சிலிர்க்கும், உளம் நெக்குருகும், கண்ணீர் பெருகும், ஆன்மா எதையோ தேடும். மெலிதான காற்று காதோரம் சேதி பேசும். நெஞ்சாங்கூட்டு நினைவுகளில் வழிபாடு நிறையும். நிலைக்கும்.

பகவான் சத்திய சாயி பாபாவின் அவதார தினம் இன்றாகும்


# அற்புதங்களை நிகழ்த்திய சாயி பாபா

மருத்துவர்
இ.கணேசமூர்த்தி, யாழ்ப்பாணம்.

கிருஷ்ண பரமாத்மா "உலகில் எப்போது தர்மம் சீர்குலைகின்றதோ, அவ்வப்போது நான் யுகம் தோறும் அவதரிக்கின்றேன்" என்று பகவத் கீதையில் கூறியுள்ளார். இது உலகம் தோன்றிய காலம் தொட்டு நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது. அவதாரம் என்றால் அருவ நிலையிலுள்ள மகா சக்தி. த்ர்மத்தை நிலைநாட்டுவதற்காக மனித உடல் எடுப்பதேயாகும்.

மகா சக்தி ஏன் தனது சங்கல்பத்தின் மூலம், தர்மத்தை நிலை நாட்டாமல், மனித உருவம் எடுத்து, எவ் வளவோ சிரமங்களைச் சந்தித்து பல வருடங்கள் செயற்பட வேண்டுமென்று நினைக்கலாம். இதற்குப் பதில் பக வானே கூறியுள் ளார்.

மனிதன் ஆசையின் காரணமாக மாயா சக்தியில் சிக்கி, உன்னத நிலையிலிருந்து விடுபட்டு, புலன் களின் இச்சைப்படி மனதைச் செலுத்தி பல வருடங்கள் செயற்பட்டதன் விளைவே தர்மம் குன்றியதற்குக் காரணம். மனிதர்களின் பழக்கப்பட்ட மனதை ஒரு நொடியில் திருப்பினால் மறுகணமே அது பழைய நிலைக்குத் திரும்பிவிடும். மனிதன் தானாகவே தனது பிழையை உணர்ந்து தன்னைத் திருத்தினால்தான் இந்த உன்னத மாற்றம் நிலைக்கும். நிலைத்திருப்பதற்கு, மனிதனின் முயற்சியும், ஆண்டவனின் அருளும் தேவை. முன்னைய யுகங்களில் ஒரு சில மனிதரே அசுரர்களாக இருந்தார்கள். (உதாரணமாக இராமாயணத்தில் இராவணன்) இவர்கள் மனிதரையும் தேவர்களையும் துன்புறுத்தினார்கள். இவர்களை அழித்து தர்மம் நிலை நாட்டப்பட்டது. பின்பு அதர்மம் குடும்ப நிலையில் தலைதூக்கியது. (உதாரணமாக மகாபாரதத்தில் கௌரவர்கள்) தற்போது கலியுகத்தில், ஒவ்வொரு மனிதனின் மனத்திலும் அதர்மம் குடிகொண்டுள்ளது. இந்தக் கலியுகத்தில், உன்னதமான மனநிலையை ஏற்படுத்தப் பல வருடங்கள் எடுக்கும். இதற்காகத்தான் மகா சக்தி மனிதனாக அவதரிக்க வேண்டியுள்ளது. அதர்மம் உச்ச நிலையை அடைந்ததனால், இறைவன் மூன்று தடவை அடுத்தடுத்து அவதரிக்கத் தீர்மானித்தார். இதைத்தான் சாயி அவுதாரம் என்று சொல்வார்கள். ஷீரடி சாயி பாபாவாகவும், சத்தியசாயி பாபாவாகவும் இரு அவதாரங்கள் நடந்தன. மூன்றாவது பிரேம சாயி பாபாவாக கர்நாடக மாநிலத்தில் நிகழும்.



மனித உருவம் எடுத்து மக்கள் மத்தியிலே வாழ்ந்து எப்படி வாழ வேண்டுமென்று முன் மாதிரியாகத் திகழ்ந்தால்தான் மக்களும் தெய்வங்களாக மாறுவார்கள். அவதாரம் நிகழ்வதற்கு, கட்டுக்கடங்காத அதர்மமும், மனிதர்களினதும் தேவர்களினதும் தீவிர பிரார்த்தனையும், இறைவனின் அன்பும் ஒன்று சேரவேண்டும். மகாசக்தி, தான் எங்கு, எப்போது எந்தக் குடும்பத்தில் அவதரிக்க வேண்டுமென்பதை நிர்ணயிக்கும்.

ஓர் அவதாரம் பற்றியோ, அல்லது கடவுளைப் பற்றியோ மனித புத்தியைப் பாவித்து முழுமையாக அறிய முடியாது. ஞான சித்தியால்தான் ஓரளவு புரிந்து கொள்ள முடியும். ஆன்மிகத்தில் அசையாத நம்பிக்கைக்குப் பின்பே அனுபவம் ஏற்படும். விஞ்ஞானத்திலே அனுபவத்திற்குப் பின்பே நம்பிக்கை ஏற்படும்.

அவதாரத்தின் மூன்று தன்மைகளான மர்மம் (Mystery ), நிச்சயமற்றது (Uncertainity) மேலோட்டத்தில் முரண்பாடு கொண்ட கூற்றுக்கள் ஆகியவற்றை அடியார்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று பகவான் கூறியுள்ளார்.

ஸ்ரீ சத்திய சாயி பாபா, இந்தியாவில் ஆந்திர மாநிலத்தில், புட்டபர்த்தியென்ற பின்தங்கிய கிராமத்தில் பெட்டவெல்கப்ப ராஜூவுக்கும் ஈஸ்வரம்மாவுக்கும் மகனாக 1926 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23ஆம் திகதி திங்கட்கிழமை காலை அவதரித்தார். அவரது பிறப்பு சாதாரண உடற்புணர்ச்சியால் ஏற்பட்டதல்ல. நீல உருண்ட வடிவிலான ஜோதி வயிற்றுள் சென்ற பின்பே கர்ப்ப அனுபவம் ஏற்பட்டதென்று தாயார் கூறினார். இதைச் சுவாமியும் ஆமோதித்தார்.

பகவான் சத்திய சாயி பாபா பல தரப்பட்ட அற்புதங்களை நிகழ்த்தியுள்ளார்.

பகவானின் போதனைகளின் சாராம்சம்:

- மனிதனில் உள்ளுறையும் தெய்வீகத்தை வெளிக் கொணரவே நான் வந்துள்ளேன்.
- சகல மதங்களும் உன்னதமானவையே. அவரவர் அவரது மதத்தின் மூலம் மேன்மையடைய வழிகாட்டவே நான் வந்துள்ளேன். புதிய மதத்தை ஸ்தாபிக்க அல்ல.
- மக்களுக்குச் செய்யும் சேவையே மகேசனுக்குச் செய்யும் பிரார்த்தனை. இந்த மனப்பாங்கை விருத்தி செய்யவே நான் வந்துள்ளேன்.
- "அனைவரையும் நேசி,
"அனைவருக்கும் சேவை செய்"
"எப்போதும் உதவி செய்
"ஒரு போதும் தீமை செய்யாதே"

பகவான் கல்வி, குடி தண்ணீர், ஆரோக்கியம், கிராமிய எழுச்சி ஆகியவற்றில் பல பெரிய திட்டங்களைச் செயற்படுத்தியுள்ளார். கல்வியின் நிறைவு ஒழுக்கமே என்று வலியுறுத்தியுள்ளார்.

சத்தியசாயிபாபா அவர்கள் 24.04.2011 இல் மகா சமாதி அடைந்தார். ஆனாலும் அவரது தெய்வீக வெளிப்பாடுகள் தீவிரமாகவும் பரவலாகவும் நடைபெறுகின்றன.

அவருடைய போதனைகளை திரிவுபடாமல் பாதுகாத்துச் செயற்படுவதற்காக, அவரே சத்திய சாயி சேவா நிறுவனத்தை ஸ்தாபித்துள்ளார்.

இது சகல நாடுகளிலும் இயங்கி வருகின்றது.




# இம் முறை நத்தார் பரிசுகளாக வியக்க வைக்கும்
# பல சலுகைகள்

| | |
|---|---|
| **MEGALINE** | ஒவ்வொரு புதிய இணைப்புடனும் குடையொன்று இலவசம் |
| **BROADBAND** | புதிய இணைப்புகளுக்கு **Wi-Fi** ரவுட்டர் ரூ.990/- இற்கு |
| **CITYLINK** | பிற்கொடுப்பனவு இணைப்பு கட்டணம் ரூ.1,000/- மட்டுமே. |
| **கோர்ட்லஸ் தொலைபேசி** | ரூ.3,690/- இற்கு கோர்ட்லஸ் தொலைபேசியை பெற்றுக்கொள்ள முடியும். (இருப்பு உள்ளவரை மட்டுமே) |

**PEO TV**

- தற்போதைய மெகாலைன் Single Play வாடிக்கையாளர்களுக்கு **ஆரம்ப கட்டணத்தில் 50% கழிவு**
- தற்போதைய மெகாலைன் Double Play (Broadband) வாடிக்கையாளர்களுக்கான, புதிய PEO TV பக்கேஜ்களுக்கு 3 **மாதங்களுக்கான PEO TV மாதாந்த கட்டணம்** அறவிடப்படமாட்டாது
- புதிய மெகாலைன் Double Play (PEO TV) மற்றும் புதிய மெகாலைன் Triple Play வாடிக்கையாளர்களுக்கு 3 **மாதங்களுக்கு PEO TV பக்கேஜ்களுக்கான மாதாந்த கட்டணம்** அறவிடப்படமாட்டாது

மேலதிக விபரங்களுக்கு: **அழையுங்கள் 1212**

www.slt.lk | Email: 1212@sltnet.lk | Web chat: www.slt.lk (My SLT→Chat with us) | Like us on f

இச்சலுகைகள் 2014 டிசம்பர் 31 வரை மட்டுமே

**அருகிலுள்ள SLT பிரதேச காரியாலயம் அல்லது டெலிஷொப்பிற்கு வாருங்கள்**

நிபந்தனைகளுக்கு உட்பட்டது சகல கட்டணங்களுக்கும் அரச வரிகள் உள்ளடக்கப்படும்




The 7th Frontier C M K


SINGER
அதி விசேட கொடுப்பனவுகள்
மின்சாரத்தை மீதப்படுத்தும் R 600a கேஸ் கொண்ட சூழலுக்கு சிநேகமான குளிர் சாதனப்பெட்டிகளுக்கு
10 வருட உத்தரவாதம்
7 வர்த்தக நாமங்களை கொண்ட 48 மாதிரிகள்
வட்டி இல்லா கொடுப்பனவு
ரூ.75,000/- வரை கழிவு
மாற்றீடு கழிவு
SINGER SAMSUNG HITACHI SISIL Godrej BEKO Whirlpool
SINGER
மாதாந்த கட்டணம் ரூ.1,999/-
RGS-150
விலை ரூ.32,999/-
வட்டி இல்லா கொடுப்பனவு முறை
மாதாந்த கட்டணம் ரூ.3,461/-
GEO-182S
விலை ரூ.40,999/-
வட்டி இல்லா கொடுப்பனவு முறை
மாதாந்த கட்டணம் ரூ.3,375/-
GEO-200D
விலை ரூ.47,999/-
ரூ.3,000/- கழிவு
GEO-242D
விலை ரூ.52,999/-
மாற்றீடு கழிவு ரூ.3,500/-
மாதாந்த கட்டணம் ரூ.4,608/-
GEO-260NF
விலை ரூ.59,999/-
ரூ.4,500/- கழிவு
HITACHI
H-RV400PG3SLS
INVERTER
விலை ரூ.126,699/-
ரூ.12,500/- கழிவு
H-RC6200S
INVERTER
விலை ரூ.490,499/-
ரூ.50,000/- கழிவு
H-R660EUK9GS
விலை ரூ.263,199/-
ரூ.75,000/- கழிவு
SAMSUNG
SMGRT26FAKM
விலை ரூ.87,499/-
வட்டி இல்லா கொடுப்பனவு முறை
SMGRS21HUTPN
விலை ரூ.305,599/-
மாற்றீடு கழிவு ரூ.45,000/-
SMGRF858
விலை ரூ.733,299/-
மாற்றீடு கழிவு ரூ.100,000/-
Whirlpool
WP-WTM400SL
விலை ரூ.95,599/-
ரூ.20,000/- கழிவு
WP-WTM500SL
விலை ரூ.109,999/-
ரூ.22,000/- கழிவு
WP-WTM555SS
விலை ரூ.125,599/-
ரூ.25,000/- கழிவு
BEKO
12 வருட உத்தரவாதம்
மாதாந்த கட்டணம் ரூ.4,681/-
B-DNE27003T
விலை ரூ.69,999/-
B-ASP 341 X
விலை ரூ.226,699/-
ரூ.27,000/- கழிவு
B-GNVE 421 X
விலை ரூ.294,399/-
ரூ.44,000/- கழிவு
SISIL
மாதாந்த கட்டணம் ரூ.3,538/-
SL-EC072
விலை ரூ.41,999/-
வட்டி இல்லா கொடுப்பனவு முறை
மாதாந்த கட்டணம் ரூ.3,375/-
ECO-192
விலை ரூ.47,999/-
ரூ.3,000/- கழிவு
மாதாந்த கட்டணம் ரூ.4,608/-
SL-ECO251
விலை ரூ.59,999/-
ரூ.4,500/- கழிவு
Godrej
GFE-GDE195DM1E
விலை ரூ.39,999/-
ரூ.6,000/- கழிவு
GFE25SMTE
விலை ரூ.56,999/-
ரூ.8,500/- கழிவு
GFE30CMTE
விலை ரூ.71,999/-
ரூ.22,000/- கழிவு
கடன் அட்டைகளுக்கு 24 மாதங்கள் வரை
வட்டி இல்லாமல்
இன்னும் பல குளிர்சாதனப் பெட்டி மாதிரிகளுக்கு இன்னும் பல கொடுப்பனவுகள்
இக்கொடுப்பனவு 2014 டிசம்பர் 31 வரை மட்டுமே.
யாழ்ப்பாணம் 021-2225408 | சங்கானை 021-2251100 | சாவகச்சேரி 021-2270197 | கொடிகாமம் 077-6433888
நெல்லியடி 021-2264937 | சுன்னாகம் 021-5100280 | மாணிப்பாய் 021-2263411 | கிளிநொச்சி 021-2280199
பருத்தித்துறை 021-2263411 | முல்லைத்தீவு 021-2290180
011 5 400 400
http://www.singersl.com
கிடைக்குமிடங்கள்
SINGER Plus
Approved Dealers


BOLT Series
Micromax nothing like anything
மனதைப் பறிகொடுங்கள்
3G தொழில்நுட்பம் கொண்ட மைக்ரோமெக்ஸ் A37B
BOLT A37B
• டுவல் சிம்
• 3.5" திரை
• 1Ghz Processor
• 2MP Rear கெமரா Digital Front கெமரா
• Android Jelly Bean
• ப்ளூடூத் | Wifi
ரூபா. 7,990
BOLT A79
• டுவல் சிம்
• 4" திரை
• 1Ghz Processor
• 2MP Rear கெமரா Digital Front கெமரா
• Android KikKat
• விரிவாக்கத்தக்க மெமரி 16GB
ரூபா. 9,990
BOLT
• டுவல் சிம்
• 3.5" திரை
• 1Ghz Dual Core Processor
• 5MP Rear கெமரா Digital Front கெமரா
• Android Jelly Bean
• ப்ளூடூத் | Wifi
• விரிவாக்கத்தக்க மெமரி 32GB
ரூபா. 12,990
ONE YEAR WARRANTY | DEALERS ISLANDWIDE
https://www.facebook.com/micromax.srilanka
Get in touch with us at www.micromaxinfo.com/sl
AUTHORIZED NATIONAL DISTRIBUTOR
மெட்ரோபொலிட்டன் காட்சியறைகள் இல.93/1/1, ஹுணுப்பிட்டி லேக் வீதி, கொழும்பு 02 0777783783
இல. 50, 3ஆம் மாடி, மஜெஸ்டிக் சிற்றி. 0777781781
HSBC HNB கிடைக்கும் வட்டி இலவச தவணைகளில்
MetroHubs பதுளை-0716798528 | காலி-0772663593 | அனுராதபுரம்-0772663634 | குருநாகல்-0772663576
இரத்தினபுரி-0719193131 | களுத்துறை 0772663643 | மாத்தறை-0772202187 | பாணந்துறை-0712391612
M-Centres கொள்ளுப்பிட்டி-0772342577 | நுகேகொடை-0779940483 | பத்தரமுல்லை-0777037796 | மொறட்டுவை-0779559770
வத்தளை-0773727426 | நீர்கொழும்பு-0714946920 | கண்டி-0772663579 | அனுராதபுரம்-0772663676
Arpico Super Centers ஹைட்பார்க் கோனர்-0114734323 | நாவின்ன-0114310374 | பத்தரமுல்லை-0114411543
வத்தளை-0114641795 | நீர்கொழும்பு-0317500750


உங்களுக்கான 3 தெரிவுகள் இருக்கும் போது ஏன் 1 அல்லது 2 மட்டும் தெரிவு செய்கின்றீர்கள்?
இலக்கம் | வேட்பாளர் | விருப்பம்
36% மின்சார சேமிப்பு ✓
10 மின்சாரமின்றி குளிர்ச்சி ✓
R600a சுற்றாடல் தோழன் குளிர்பதன வாயு ✓
உங்களின் வசதிக்காக
3 தெரிவுகள்
அருகிலுள்ள அபான்ஸ் காட்சியறைக்கு சென்று 3 சிறப்பியல்புகளைக் கொண்ட LG இன்வேட்டர் குளிர்சாதனப்பெட்டியை கொள்வனவு செய்யுங்கள்
LG Life's Good
லோ வொட் ஸ்மார்ட் இன்வேட்டர் குளிர்சாதனப்பெட்டி
மின்சார சேமிப்புக்கான 36% வரை உத்தரவாதம்
79,900
மாற்றீட்டுச் சலுகை ரூ.74,900
வட்டியில்லா 12 கொடுப்பனவு
i3
Smart Inverter Compressor
INVERTER 10 YEAR WARRANTY
Power Cut EverCool™
2376000
நாடெங்கிலும் உள்ள அபான்ஸ் மற்றும் அபான்ஸ் எலைட் காட்சியறைகளில் பெறலாம்.
Abans


Clean & Clear
DREAM shopping
மலேசியா
சிங்கப்பூர்
இந்தியா
உங்கள் பிரியமான தோழியுடன் தொடர்ந்து 3 நாட்களுக்கு சிங்கப்பூர், மலேசியா அல்லது இந்தியா சென்று
சொப்பிங் செய்யுங்கள்.
ஆறுதல் பரிசுகள் ஏராளம்
இதோ சொப்பிங் செய்யும் நேரம் வந்துள்ளது
கிளீன் அன் கிளியர் தயாரிப்புகளின் பின்புறமிருக்கும் கார்டை சுரண்டி அதிலிருக்கும் இரகசிய எண்ணை 0777 670 670 இற்கு SMS செய்து வாய்ப்பை வெல்லுங்கள்.
நிபந்தனைகள்
• ஒரு நாட்டிற்கு இரண்டு நண்பர்கள் வீதம் 3 நாடுகளுக்கு 3 ஜோடி நண்பர்களுக்கு வாய்ப்பு.
• இச்சலுகை 2014 நவம்பர் 20ம் திகதி முதல் 2015 ஜனவரி 31ம் திகதி வரை அனுப்பப்படும் SMS களுக்கு மட்டும்.
• வெற்றியாளர்கள் சீட்டிழுப்பு மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்
WP/GT/4226

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**நாளை**

கார்த்திகை-08 திங்கட்கிழமை 24.11.2014
திதி: துதியை பி.ப.04.37 வரை
நட்சத்திரம்: கேட்டை பி.ப.01.36 வரை
சுபநேரம்: 12.11 - 01.41 வரை
இராகுகாலம்: 07.41-09.11 வரை

**மேடம்:** விரும்பிய பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புதிய ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் மதிப்புக் கூடும்.

**இடபம்:** குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள். உத்தியோகத்தில் புதிய பொறுப்புகளை ஏற்பீர்கள்.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். உறவினர்களில் உண்மையானவர்களைக் கண்டறிவீர்கள். வேற்றுமதத்தவர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்.

**கடகம்:** தடைகளைக் கண்டு தளரமாட்டீர்கள். நட்பு வட்டம் விரியும். புதிய வேலை அமையும். உத்தியோகத்தில் இழந்த உரிமையைப் பெறுவீர்கள்.

**சிங்கம்:** வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். கண்டும் காணாததுபோல் சென்று கொண்டிருந்த உறவினர்கள் வலிய வந்து பேசுவார்கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும்.

**கன்னி:** புதியவர்கள் நண்பர்களாவார்கள். நீண்ட நாள்களாக தள்ளிப்போன காரியங்கள் இன்று முடிவடையும். பழைய பிரச்சினைகளைத்தீர்ப்பீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**துலாம்:** பல வேலைகளையும் இழுத்துப் போட்டுப் பார்க்க வேண்டி வரும். அவசரப்பட்டு அடுத்தவர்களை விமர்சிக்க வேண்டாம். எவரையும் முழுமையாக நம்ப வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களைப் பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**விருச்சிகம்:** அசைவ, கார உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களால் பிரச்சினைகள் வரும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும்.

**தனுசு:** பிரியமானவர்களுக்காக சில வற்றை விட்டுக் கொடுப்பீர்கள். எதிர்பாராத உதவி கிடைக்கும். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். உத்தியோகத்தில் பாராட்டப்படுவீர்கள்.

**மகரம்:** நீண்டநாள் ஆசைகள் நிறைவேறும். உறவினர், நண்பர்களால் அனுகூலம் உண்டு. உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.

**கும்பம்:** தெளிவான முடிவுகள் எடுப்பீர்கள். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் வேலையாள்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**மீனம்:** சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசியச் செலவுகள் அதிகரிக்கும். கோபத்தால் இழப்புகள் ஏற்படும். யதார்த்தமாக நீங்கள் பேசுவதைக் கூட சிலர் தவறாகப் புரிந்து கொள்வார்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 9 | | 4 | | | 8 | 2 | 5 |
| | | | | | | 6 | | 1 |
| 1 | | | 8 | | 5 | 9 | | |
| 8 | 7 | 4 | 6 | | | | 5 | |
| | | | 2 | | 7 | | | |
| | 5 | | | | 4 | 3 | 7 | 6 |
| | | 7 | 3 | | 6 | | | 4 |
| 5 | | 3 | | | | | | |
| 4 | 1 | 8.' | | | 9 | | 6 | 3 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 5 | 2 | 9 | 6 | 1 | 4 | 7 | 8 |
| 4 | 8 | 6 | 7 | 3 | 5 | 1 | 2 | 9 |
| 9 | 7 | 1 | 2 | 8 | 4 | 3 | 6 | 5 |
| 5 | 2 | 3 | 6 | 1 | 9 | 8 | 4 | 7 |
| 1 | 6 | 7 | 3 | 4 | 8 | 5 | 9 | 2 |
| 8 | 4 | 9 | 5 | 7 | 2 | 6 | 1 | 3 |
| 2 | 1 | 4 | 8 | 5 | 7 | 9 | 3 | 6 |
| 6 | 9 | 8 | 1 | 2 | 3 | 7 | 5 | 4 |
| 7 | 3 | 5 | 4 | 9 | 6 | 2 | 8 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

**தென்மராட்சியில் ஆரம்பக் கல்வியில் அறிவொளி பரப்பும் அன்பொளி கல்வி நிலையத்தில் கல்வி கற்று புலமைப்பரிசில் பரீட்சை - 2014 இல் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா**

**23.11.2014 ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணிக்கு ஐங்கரன் மணிமண்டபத்தில் நடைபெறவிருக்கும் பரிசில் விழாவில் பதக்கங்களையும் பரிசில்களையும் பெறும் மாணவச் செல்வங்கள்**



தி.சுபாங்கி புள்ளி - 179 | ப.சாதனா புள்ளி - 176 | சி.டிலக்சனா புள்ளி - 173 | சி. ஆர்த்தியா புள்ளி - 172 | செ.ரைற்ரஸ் புள்ளி - 172 | செ.கோகில்ராஜ் புள்ளி - 171 | ச.மேனகன் புள்ளி - 170 | த.நிரோசிகா புள்ளி - 170 | கு.அபியுகன் புள்ளி - 169 | சு.டிலக்ஷன் புள்ளி - 169 | ச. ஆத்மிகா புள்ளி - 169



க.பிரியதர்சினி புள்ளி - 169 | வ.அருண்மொழி புள்ளி - 169 | செ. அபிஸ்னா புள்ளி - 168 | சி.பிரவீன் புள்ளி - 167 | ம.தட்ஷஜன் புள்ளி - 167 | மு.லக்ஸ்சன் புள்ளி - 166 | பி.ஜெனுசியா புள்ளி - 166 | தெ.நதிபா புள்ளி - 166 | ம.லூட்சியா புள்ளி - 166 | சு.டினோஜா புள்ளி - 165 | நா. அபிஷா புள்ளி - 164



பி.கிஷாந் புள்ளி - 163 | ச.சஞ்சிதா புள்ளி - 162 | யோ.ரம்யராஜ் புள்ளி - 162 | க.வாதுமன் புள்ளி - 162 | வி.பானுஜா புள்ளி - 162 | த.விசாலன் புள்ளி - 161 | யோ. யஸ்மின்மீரா புள்ளி - 160 | ம.ஆருரன் புள்ளி - 160 | ஜெ.நிக்ஷன் புள்ளி - 160 | ஜெ.சாகித்தியன் புள்ளி - 159 | சி.பவுசியா புள்ளி - 156



அ.ஜனுசன் புள்ளி - 156 | சி.ரிஷிபா புள்ளி - 156 | சி.மதுஷா புள்ளி - 156 | த.சுரபிகா புள்ளி - 155 | க.எழில்வேந்தன் புள்ளி - 155 | பூ.பஞ்சிகா புள்ளி - 154 | ம.டிலோஜினி புள்ளி - 153 | சு.திவ்வியன்றோய் புள்ளி - 152 | ர.அபிஷா புள்ளி - '152 | ர.ராதிகா புள்ளி - 151 | ச.டனிஸ்ரன் புள்ளி - 151



செ.சுஜீபன் புள்ளி - 151 | செ.அனிஸ்ரன் புள்ளி - 150 | சு.சினேகன் புள்ளி - 150 | சு.மாதங்கி புள்ளி - 150 | சி.ஜனார்த்தனன் புள்ளி - 160 | தே.குவிந்தன் புள்ளி 160 | செ.பிரசாத் புள்ளி - 159

இம்மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
இவர்களுடன் தென்மராட்சியில் சித்தியடைந்த ஏனைய மாணவர்களையும், உயர்வான புள்ளிகளைப் பெற்றும், வெட்டுப்புள்ளியால் சித்தியடையத் தவறிய ஏனைய மாணவச் செல்வங்களையும் வருங்காலத்தில் முயற்சியுடன் படித்து கல்விப் பாதையில் வெற்றிகள் பெற்றிட பாராட்டி வாழ்த்துகின்றோம்.
பெற்றோர், ஆசிரியர்கள்

"சின்ன விழி அசைத்து சிரித்துவரும் சித்திரங்களை அள்ளி அணைத்து அரிய கல்வி ஊட்டிடுவோம்"

அன்பொளி கல்வி நிலையம்
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

## களுதோட்டை பினான்ஸியல் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்

அனைத்து இந்தியன் வாகனங்களுக்குமான முழு பினான்ஸ் தொகையும் மற்றும் மேலதிகமாக கைக்குப் பணமும் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரு எளிதான பினான்ஸ் சேவைக்கு இன்றே நாடுங்கள்

**களுதோட்டை பினான்ஸ் (தனி) நிறுவனம்.**

தொடர்புகளுக்கு: இல.88, ஆஸ்பத்திரி வீதி,

(64440)(4.3.3) மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்.

076 686 2907, 077 769 6991, 077 806 3774, 021 221 9897

சிங்களத்தில் தொடர்பு கொள்ள: 077 771 0585, 077 382 4091

உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு

advt@uthayan.com

0215671111

## பாராட்டி வாழ்த்துகின்றோம்







Congratulation

Congratulation

உதயகுமாரன் அஜய்-176, கஜேந்திரகுமார் மதுஷன்-174, பத்மலிங்கம் ஆதித்தியன்-161

யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் கல்வி கற்கும் உதயகுமாரன் அஜய்-176, கஜேந்திரகுமார் மதுஷன்-174, பத்மலிங்கம் ஆதித்தியன்-161 ஆகியோர் 2014 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். இவர்கள் கல்வியில் மேன்மேலும் பல சாதனைகள் படைக்க வாழ்த்துகின்றோம்.

(54318)(4.3.6)

**நண்பர்கள்.**

## SMARTPHONE / TABLET SOFTWARE DEVELOPERS FOR HIRE

Fourgen Solutions is a new mobile software solutions developers. We have few interesting projects with Canadian companies in the coming years.

**ENTRY LEVEL SOFTWARE DEVELOPER:**

We like to add at least two entry level software developers to our team. We will provide on site hands - on training for 3 months on the technologies used in our software platform. On the completion of the training we will hire selected candidates to work on our projects permanently.

**QUALIFICATION:**

1. Bsc in computer science or Higher Diploma in Computer Programming.
2. Must be an independent learner and should have a passion for Programming.
3. Prior work experience is not required.
4. Knowledge on web development Htm15, CSS, and javascript are prefered.

**SOFTWARE DEVEIOPER / TEAM LEAD:**

Experienced software developer is expected to work independently and coordinate team in Canada to understand requirement and provide guidance to other team members.

**QUALIFICATION:**

1. Bsc in Computer science or equivalent degree in Information Technology.
2. Minimum 3 years work experience in software development.
3. Ability to lead small team.
4. Good Communication Skills and interpersonal skills.


Send your resume to,
email:fourgensolutions@gmail.com

(41429)(12.3.6)

## யாழ். நகர் மத்தியில்

### நவீன வசதிகளுடன் கூடிய அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் கலாசார திருமண மண்டபம்

- முற்றிலும் குளிரூட்டப்பட்ட மண்டபம். 700 பேர் இருக்கைகளில் அமர்ந்திருந்து திருமணத்தைப் பார்க்கும் வசதி.
- கீழ் மண்டபத்தில் 350 பேர் அமர்ந்திருந்து நிகழ்வினை பார்க்கக் கூடிய வசதி.
- ஒரே நேரத்தில் 200 பேர் உணவருந்தும் வசதி.
- Lift வசதி, விசாலமான வாகன தரிப்பிட வசதி.
- அனைவரும் திருமணத்தைப் பார்க்கும் தொலைக்காட்சி வசதி.
- உணவுகளை தாங்களே பரிமாறிக் கொள்ளும் வசதி.
- மற்றும் உங்கள் விருப்பத்திற்கு ஏற்ற முறையில் அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.






இல.542, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 373 4116, 021 222 1355, 021 222 1356.

மின்னஞ்சல்: asrhall@hotmail.com

Find us on: Facebook.com/jaffnaasrenterprises

## கட்டட நிர்மாணத்துறை பணியாள்களுக்கான வெற்றிடம்

கிளிநொச்சி அறிவியல் நகரில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் புதிய கட்டட வேலை ஸ்தலத்தில் கீழ்குறிப்பிடப்படும் பணியாள்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன. தங்குமிட வசதியுடன் நீண்டகால சேவையும் வார நடுப்பகுதியில் முற்பணமும் வார இறுதியில் ஊதியமும் வருட இறுதியில் சேவைக்காலத்திற்கான போனஸ் பணமும் வழங்கப்படும்.

1. மேசன் உதவியாள்கள் - (Labours)
2. மேசன் தொழிலாளர் - (Masons)
3. தச்சுத்தொழிலாளர் - (Carpenters)
4. வர்ணம் தீட்டுபவர் - (Painters)
5. கம்பி (வலுவூட்டி) வளைப்பவர்கள் - (Barbenders)
6. ஒட்டுநர் - (Welders)

தொடர்புகளுக்கு:

**முகாமையாளர்,**

இலங்கை மத்தியவங்கி மாகாண காரியாலய கட்டட வேலைஸ்தலம்,
சிவபாதகலையக பாடசாலை வீதி,
151ஆம் கட்டை, அறிவியல் நகர், கிளிநொச்சி.

அல்லது

வீ.வீ.இராமநாதன் அன் கொம்பனி பிறைவேட் லிமிட்டெட்,
பொது வைத்தியசாலை சுற்றுவட்ட வீதி, வவுனியா.

(41411)(12.3.6)

## கட்டட நிர்மாணத்துறை வெற்றிடங்கள்

கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் புதிய கட்டட வேலை ஸ்தலத்திற்கு கீழ்குறிப்பிடப்படும் வெற்றிடங்கள் தங்குமிட வசதிகளுடன் உள்ளன.

1. **Technical Officer:**
   NDT (Civil) with minimum 04 years Experience
   or
   NCT (Civil) with minimum 08 years Experience
2. **Building supervisor:**
   NCT (Civil) with minimum 04 years Experience or Equivalent.

தொடர்புகளுக்கு:


**முகாமையாளர்,**

வீ.வீ.இராமநாதன் அன் கொம்பனி பிறைவேட் லிமிட்டெட்,
பொது வைத்தியசாலை சுற்றுவட்ட வீதி, வவுனியா.
Email: vvrcopvt@sltnet.lk / vvrcopvt@gmail.com

(41412)(12.3.6)

## நத்தார் குதூகலம் மடிக் கணினியுடன்

softlogic
BEST IN THE BUSINESS




**Dell 3542 i3 (4th gen)**
4 GB Ram, 500 GB HDD
3 in 1 Card Reader
HD web Cam (1280x720)
Up to 1600 MB onboard VGA
DVD Writer
spill resistant KeyBoard
Ubuntu Linux




32" Panasonic TV
ஆரம்ப கட்டணம்
5900/=
மீதி 13 மாத வட்டியில்லா கொடுப்பனவு

32" Samsung TV
ஆரம்ப கட்டணம்
5900/=
மீதி 13 மாத வட்டியில்லா கொடுப்பனவு

* நிபந்தனைக்குட்பட்டது.

**Softlogic**
*Kannathiddy Road, Jaffna.*

021 567 1108
0777 397 734
077 048 2041
077 192 9771

# STUDY IN NEW ZEALAND, SINGAPORE, IRELAND

- HOTEL MANAGEMENT
- IT / COMPUTER SCIENCE
- COOKERY
- EARLY CHILDHOOD EDUCATION
- CULINARY ARTS
- NURSING
- ADVENTURAL HOSPITALITY MANAGEMENT
- ENGINEERING (CIVIL/MECHANICAL/ELECTRONIC/AIR CRAFT)
- FOOD PREPARATION (SINGAPORE)
- MEDIA DESIGNING /GRAPHIC DESIGNING
- BUSINESS
- DIPLOMA IN FILM AND TELEVISON PRODUCTION
- 3D Animation

## SINGAPORE

- ஹோட்டல் பாடநெறிகளுக்கு குறைந்த பாடநெறி கட்டணம்.
- சம்பளத்துடன் வேலை பயிற்சி (IN RESORTS AND STAR HOTELS)
- IELTS தேவையில்லை.
- புலமைபரிசில்கள் பெற தகுதி.
- hospitality management can be transfer to spaine

## IRELAND

- குறைந்த பாடநெறி கட்டணம்
- Certificate in Nursing-
- Dependent விசா பெற முடியும்
- சம்பளத்துடன் பகுதி நேர வேலை வாயப்புக்கள்

## NEW ZEALAND

- குடும்பத்தினருக்கு Dependent விசா.
- வேறுப்பட்ட கட்டணத்தில் பல்வேறு பாடநெறிகள்
- சம்பளத்துடன் பகுதி நேர வேலை வாயப்புக்கள்
- படிப்பை முடித்து 12 லிருந்து 24 மாதங்களுக்கு பின் Work Visa பெறமுடியும்
- ஆங்கிலம் மொழியில் 5 வருடம் கல்வி கற்றவர்களுக்கு IELTS தேவையில்லை
- வெகு விரைவில் நியூசிலாந்திலிருந்து வரும் பிரதிநிதியை சந்திக்கலாம்.
- வீசா பெற்றுக் கொடுத்தல் மற்றும் நேர்முகத் தேர்வுகளை ஒழுங்கு செய்தல் போன்றவற்றில் நியுசிலாந்தின் உரிமம் பெற்ற ஆலோசகர்களைக் கொண்ட ஒரே நிறுவனமாகும். மற்றும் வீசா பெறுதலுக்கான வாய்ப்புக்கள் அதிகம்.



எங்களுடன் பதிவு செய்து கொள்வதற்கு
0775 595531

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகளை எங்கள் நிறுவனத்தில் கற்கலாம்.

- Certificate In IT / Diploma In IT
- Certificate In ERP / Diploma In ERP
- Cloud Security / Advanced Cloud Computing
- Advanced Exel Accountancy
- IELTS
- Certificate In English / Diploma In English

**INNOSERV SOLUTION (PVT) LTD**
NO 66/2/2 GALLE ROAD, DEHIWALA NORTH, DEHIWALA. (In front of st. Mary's Church)
Tel: 0114-389741 / 0114-389742
## 45 ஆவது பிறந்தநாள் நினைவஞ்சலி



| அன்னையிடம் | இறைவனிடம் |
|---|---|
| 23 - 11 - 1969 | 02 - 05 - 2006 |

### அமரர் பஸ்ரியன் ஜோர்ஜ் சகாயதாஸ் (சுரேஷ்)

முன்னாள் 'சந்தைப்படுத்தல் முகாமையாளர்'
'உதயன்' பத்திரிகை நிறுவனம்

ஆண்டவருக்குள் இறப்பவர் பேறுபெற்றோர்.
இனி அவர்தம் உழைப்பினின்று இளைப்பாறுவர்.
ஏனெனில். அவர் செய்த நன்மைகளே அவர்களைப் பின்தொடரும்.

<u>ஜெபம்:</u>

இரக்கம் நிறைந்த தந்தையே. உமது அடியார் பஸ்ரியன் ஜோர்ஜ் சகாயதாஸ் இவ்வுலகைவிட மேன்மையான ஓர் உலகில். அன்பும். அமைதியும். இன்பமும் நிறைந்த நிலையான வீட்டில் இருக்கிறார் என்பதே எமது நம்பிக்கை. ஆண்டவரே. உமது இரக்கத்தை கெஞ்சி மன்றாடும் எங்களுக்குச் செவிசாய்த்து உமது அடியாரின் ஆன்மாவைப் புனிதர்களுடைய தோழமையில் சேர்த்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

ஆமென்-

எமது சுரேஷின் ஆன்ம இளைப்பாற்றுக்காக் நாளை (24.11.2014) காலை 6.30 மணிக்கு மட்டக்குளிய கார்மேல் மாதா சிற்றாலயத்திலும், காலை 6.00 மணிக்கு கொட்டாஞ்சேனை 'புனித லூஸியாள்' பேராலயத்திலும் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

(சி/17870)(4.3.6)

**எமது சுரேஷை என்றுமே மறவாத**
**மனைவி - சுவேன்** (Suven)
**பிள்ளைகள் - அல்றின்** (Alrin), **சேஷா** (Saesha)
(WINDSOR, BRISBANE, AUSTRALIA)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி சிந்தாமணி



மணி மோட்டோஸ் கராஜ் முக்கராவத்தை, ஊரிக்காட்டைச் சேர்ந்த சின்னத்தம்பி சிந்தாமணி 21.11.2014 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சின்னத்தம்பி - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகனும், கிருஸ்ணசாமி - இராசம்மா தம்பதியரின் மூத்த மருமகனும், காலஞ்சென்ற தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், விஸ்வலிங்கம் பாலாமணி, விவேகானந்தம் தவமணி, அருந்தவராசா சாந்தினி (சாந்தி)ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.11.2014) ஞாயிற்றுக்கிழமை மணி மோட் டோஸ் கராஜ் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 2 மணியளவில் ஊரிக்காடு மயிலியதனை இந்துமயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(52020) (12.3.6)

தகவல்:
**வி.பாலாமணி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

# தொடர்ச்சிகள்

## தேர்தல்

ஐ.தே.கவினர் கொண்டாடங்களை நடத்தினர். மைத்திரி பால சிறிசேன பொது வேட்பாளராக அறிவிக்கப்பட்டதையும், ஆளுங் கட்சியிலிருந்து எதிர்க்கட்சிக்குத் தாவியவர்களை கோஷம் எழுப்பி வர வேற்றும் பட்டாசு கொளுத்தி ஆர்ப்பரித்தனர்.

இதன்போது இனந்தெரியாத குழுவினர் நேற்றுமுன்தினம் மாலை 6.40 மணியளவில் வாகனத்தில் அந்தப் பகு திக்கு வந்துள்ளனர். தீடீ ரென அங்கு துப்பாக்கிப் பிரயோகத்தை மேற் கொண்டுள் ளனர். இதன்போது ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினரான சமில ரணசிங்க என்பவர் படுகாயமடைந்தார். உடனடியாகவே கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதற்கிடையே, மாவத்தகம பகுதியில் ஐ.தே.க.வின் வாகனத் தொடரணி மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பணியகத்துக்கு அருகே நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் பலர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை, தலைநகரில் நேற்றுமுன்தினம் முதல் அம்பாந்தோட்டை மாநகர சபை மேயர் எராஜ் பெர்ணாண்டோவும் அவரது ஆதரவாளர்களும் நடமாடுவது தொடர்பில் ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டிருந்தன.

அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் மத்தள விமான நிலையத்தை பார்வையிடச் சென்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை துப்பாக்கியைக் காட்டி மிரட்டியதாக எராஜ் பெர்ணாண்டோ மீது கடந்த காலங்களில் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. இதன் போது தான் விளையாட்டுத் துப்பாக்கியை எடுத்து வந்திருந்ததாக எராஜ்பெர்ணாண்டோ கூறியிருந்தார்.

இந்த நிலையில் தலை நகரில் நேற்றுமுன்தினம் இவர் நடமாடிய செய்தியை கொழும்பு ஊடகங்கள், விளையாட்டுத் துப்பாக்கியுடன் அம்பாந்தோட்டை மேயர் என்று தலைப்பிட்டு வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## 'ஐயோ சிறிசேன'

உள்ளேயும் வெளியேயும் இரண்டு மைத்திரிகள் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

'எமது பொதுச் செயலர் கட்சியை விட்டு விலகி, ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க.வுடன் இணைந்து போட்டியிடப் போகிறார். நான் அவருக்காக வருந்துகிறேன் என்று மஹிந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற வாழ்வின் எழுச்சித் திட்ட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மைத்திரிபால சிறிசேன எதிர்க் கட்சிகளின் பொறியில் விழுந்து விட்டார். 2010 ஆம் ஆண்டு சரத் பொன்சேகா விழுந்த பொறியில் இப்போது அவர் விழுந்துள்ளார். இப்போது ரணில் விக்கிரமசிங்கவுக்கு இரண்டு மைத்திரிகள் உள்ளனர். ஒருவர் வீட்டுக்குள் (மனைவி மைத்ரி) இருக்கிறார். மற்றவர் (மைத்திரிபால சிறிசேன) வெளியில் இருக்கிறார்.

நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதே எதிர்க்கட்சிகளின் பிரதான கோரிக்கையாக உள்ளது. ஆனால், நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதற்கு தெரிவுக் குழுவை அமைத்து இரண்டு ஆண்டுகளாகியும் எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்கவில்லை, என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

எதிரணியின் பொது வேட்பாளராக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் மைத்திரி பால சிறிசேன நிறுத் தப்பட்டுள்ளமை குறித்த செய்தியை அரச சார்பு ஊட கங்கள் நேற்றைய தினம் வெளியிடவில்லை. அத்துடன் அவர்களின் அமைச்சுப் பதவிகள் பறிக்கப்பட்ட செய்தியையும் பிரசுரிக்கவில்லை.

ஆனாலும் டெய்லி நியூஸ் ஆங்கில நாளிதழ், 'ஐயோ சிறிசேன' என்ற பிரதான தலைப்பில் ஜனாதிபதியின் உரையைச் செய்தியாக வெளியிட்டுள்ளது. (த-5)

## மைத்திரிபாலவின்

னால் அவரது அமைச்சுப் பதவி மற்றும் பொதுச் செயலாளர் பதவி என்பன பறிக்கப்பட்டது. இந்த நிலையில் நேற்று முதல், பொலநறுவையிலுள்ள அவரது வீட்டுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு மற்றும் அமைச்சரவைப் பாதுகாப்பு என்பன மீளப் பெறப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினருக்குரிய பாதுகாப்பு மட்டும் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, இந்த அரசு பழிவாங்கும் அரசு. எதிரணியில் இணைந்தவர்களின் பாதுகாப்பு, வாகனம், வீடு, பதவி என்பனவற்றை பறிக்கும் என்று தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## மைத்திரிபால

வாறு தடங்கலுக்குள்ளாகியுள்ளது. சிரச தொலைக்காட்சியில் நேற்று இரவு 7.30 மணிக்கு இடம் பெற்ற 'சட்டண' நிகழ்ச்சியில், எதிர்க்கட்சிகளின் பொது ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன, அமைச்சர் ராஜித் சேனாரத்ன, ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கா, ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் ஆகியோர் பங்கெடுத்திருந்தனர்.

இந்த நிகழ்ச்சி சிரச, சக்தி, எம்.ரீ.வி தொலைக்காட்சிகளில் நேரடியாக ஒளிபரப்பப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் நேற்று இரவு 7 மணிக்குத் திடீரென மூன்று தொலைக்காட்சிகளையும் மக்கள் பார்க்க முடியாதவாறு தடை ஏற்படுத்தப்பட்டது.

டயலொக் ரீ.வியின் வலையமைப்பு மற்றும் பியோ ரீ.வியின் வலையமைப்பு ஆகியவற்றிலேயே இந்தத் தடங்கல் ஏற்பட்டது. சாதாரணமான யூ.எச்.எவ் மற்றும் வி.எச்.எவ் அலைவரிசைகளினூடாக மாத்திரமே மக்கள் குறித்த நிகழ்ச்சிகளைப் பார்க்க முடிந்தது. (த-5)

## நாயை விடவும்

ருக்கி றார். பாரம்பரிய மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

யாழ். பாதுகாப்பு நடவடிக்கை தலைமையகத்தின் ஏற்பாட் டில் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவின் பிறந்த நாளை ஒட்டி வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மக்களுக்கான மாடுகள், ஆடுகள் போன்ற கால் நடைகளையும், மாணவர் களின் மரநடுகையை ஊக்குவிக்கும் முகமாகத் தென்னங்கன்று மற்றும் பழமரக் கன்றுகளை வழங்கும் நிகழ்வு நேற்று யாழ். பொது நூலகத்துக்கு அண்மையில் உள்ள திறந்தவெளியில் யாழ். மாவட்ட பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் டக்ளஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மீண்டும் நாட்டில் அமைதி யற்ற நிலையை ஏற்படுத்த பல கட்சிகள் தொடர்ந்து செயற் பட்டு வருகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இதற்கான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது. தவறான அரசியல் வழி நடத்தல்களால் எமது மக்கள் எல்லாவற்றையும் இழந்திருக்கிறார்கள். குறிப்பாக வடக்கு மாகாண சபைக்கு ஏனைய மாகாணங்களோடு ஒப்பிடும்போது அதிகளவான நிதி ஒதுக்கப் பட்டிருக்கின்றது. இதுவரை அவர்கள் 30 வீதமான நிதியையே பயன்படுத்தி யிருக்கின்றனர். ஏனைய நிதி அனைத்தும் இன்னும் ஒன்றரை மாதங்களில் திரும்பிப் போய்விடும். இந்த வைக்கோல் பட்டடை நாய் என்ற சொல் பரவலாக அடிபடுகின்றது. அவர்களை அப்படிக்கூடச் சொல்லமுடியாது. ஏனென்றால் அவர்கள் தாங்களும் செய்கிறார்கள் இல்லை. மற்றவர்களையும் செய்ய விடுகிறார்களும் இல்லை. அவர்கள் மட்டும் சுகபோக வாழ்க்கையை வாழ்கிறார்கள். யாழ் தேவி வந்தது. மக்கள் வரவேற்றார்கள். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பகிஷ்கரிக்கக் கோரியது. ஆனால் மக்கள் அவ்வாறு பகிஷ்கரிக்க வில்லை. ஒரு காலத்தில் எது வும் நடக்கலாம் என்ற நிலை இருந்தது. அதை எமது ஜனாதிபதிதான் மாற்றினார். எமது பிள்ளைகள் நிம்மதியாக கல்வி கற்கக்கூடிய சூழ்நிலையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷதான் ஏற்படுத்தினார் -என்றார்.

இந்த நிகழ்வில் 522 ஆம் படைப்பிரிவின் கட்டளைத் தளபதி, 51 ஆம் படைப்பிரி வின் தளபதி, 52 ஆம் படைப்பிரிவின் தளபதி மற்றும் படைப்பிரிவுகளின் கட்ட ளைத் தளபதிகள், சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அமைப்பாளர்கள் எனப் பலர் இதில் கலந்து கொண்டனர். (த-109)

## பக்கா

எதிரணி வேட்பாளராக்குவ தில் மிக முக்கிய பங்கை வகித்தவரும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா குமார துங்கவே இந்த இரகசியம் பேணும் நகர்விலும் முக்கிய பங்காற்றினார் என்று கூறப் படுகின்றது. மேற்குலக நாடொன் றின் இலங்கைக்கான தூதரகம் ஒன்றே செய்மதித் தொலைபேசிகளை சந்திரிகாவுக்கு வழங்கியதாக கொழும்பில் வெளியாகும் சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பொது வேட்பாளரைத் தெரிவு செய்யும் சம்பந்தப்பட்ட கட்சிகளின் தலைவர்கள் தவிர்ந்த (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் உட்பட) வேறு எவருக்கும் மைத்திரிபாலவின் வருகை பற்றிய எந்தத் தகவல்களும் பரிமாறப்படவில்லை. ஜனாதிபதித் தேர்தலை மஹிந்த ராஜபக்ஷ அறிவிக்கும் வரைக்கும் மைத்திரிபாலவின் வருகை குறித்த எந்தத் தகவலையும் வெளியிடுவதில்லை என்பதிலும் இந்தத் தலைவர்கள் இணக்கம் கண்டிருந்தனர்.

தகவல் வெளியே கசிந்துவிடாமல் இருப்பதற்காகவும் மஹிந்த அணிக்குப் போக்குக் காட்டுவதற்காகவும் பொது எதிரணி வேட்பாளர் தெரிவில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, எதிர்க்கட்சித் தலைவர் ரணில், ஐ.தே.க. தலைமைத்துவ சபையின் தலைவர் கரு ஜெயசூரிய ஆகியோரின் பெயர்களே பரிசீலனையில் இருப்பதாகவும் அவர்கள் இல்லாதபட்சத்தில் அர்ஜுன ரணதுங்க, சோபித தேரர் ஆகியோரின் பெயர்கள் பரிசீலிக்கப் படுவதாகவும் திட்டமிட்ட ரீதியிலேயே ஊடகங்களுக்கு தகவல் கசியவிடப்பட்டது.

இந்த உரு மறைப்பின் பின்னணியில் மைத்திரிபாலவை பொது எதிரணி வேட்பாளராக இணங்க வைப்பதற்கான பேரம் பேசல்கள் கச்சிதமாக நகர்த்தப் பட்டன. இந்த நகர்வுகளில் சந்திரிகா நேரடியாக ஈடுபட்டாலும் கூட மைத்திரிபாலவை நேரில் சந்தித்து இது தொடர்பில் பேசுவதை அவர் தவிர்த்துக் கொண்டார். அமைச்சர் ராஜித சேனாரத்னவே, சந்திரிகா மற்றும் மைத்திரி பாலவுக்கு இடையில் தூதராகச் செயற்பட்டார்.

மஹிந்த அரசில் ராஜிதவும் மைத்திரிபாலவும் அமைச்சர்களாக இருந்தபோதும் பொது வேட்பாளர் தொடர்பாக அவர்கள் நடத்திய சந்திப்புக்கள் கூட மிக மிக இரகசியமாகவே மேற்கொள்ளப்பட்டன. சந்திப்புக்காக பயன்படுத்தப்பட்ட அமைச் சர்களின் வாகனங்களின் இலக்கங்கள் அடிக்கடி மாற்றப்பட்டன. ஜீப் மற்றும் கார் ஒன்றும் இவ்வாறு இலக்கங்கள் மாற்றப்பட்டு சந்திப்புக்களுக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது. அடிக்கடி அவர்கள் சந்தித்துப் பேசுவது மஹிந்த தரப்பை உஷார்ப் படுத்திவிடும் என்ப தால் இந்த ஏற்பாடுகள் செய்யப் பட்டன.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரைக் கனகச்சிதமாகத் திட்டமிட்டு முன்னெடுத்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கே சவால் விடும் வகையில் இந்த இரகசிய நடவடிக்கையை சந்திரிகா உள்ளிட்ட எதிரணி சிறப்பாகச் செயற்பட்டதாக கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள் வியக்கின்றன. (உ-5)

## யாழ்.

மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன. இனங்காணப்பட்டவர்களில் 3 குழந்தைகளும் உள்ளடக்கம் என்று தெரி விக்கப்படுகிறது.

அதிர்ச்சி தரும் வகையில் அதிகரித்திருக்கும் எய்ட்ஸ் நோயாளர்களின் எண்ணிக் கையை ஆய்வு செய்து பார்த்தபோது பதின்ம வயது டைய பெண்கள் ஏமாற்றப் பட்டு எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளாக்கப்படலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளதாக மருத்துவர் ஒருவர் 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித் தார். தனது பெயரை வெளி யிட அவர் விரும்பவில்லை.

எய்ட்ஸ் நோய்த் தாக்கத்துக்குள்ளான 65 தொடக்கம் 70 பேர் வரையிலானோர் யாழ். மாவட்டத்தில் இதுவரை கண்டறியப்பட்டுள்ளனர். அவர்களில் 13 பேர் இந்த வருடத் தில் மாத்திரம் இனங்காணப் பட்டுள்ளனர். அவர்களில் 14 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

3 குழந்தைகள் எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று நம்பப்படுகின்றது. ஆரம்பப் பரிசோதனைகள் எய்ட்ஸ்க்கான அறிகுறிகளைக் காட்டினாலும் முழுமையான அறிக்கைகள் கிடைத்த பின்னரே அதனை உறுதிப்படுத்த முடியும் என்கின்றன மருத்துவ வட்டாரங்கள். எய்ட்ஸ் நோயுள்ள பெற்றோருக்குப் பிறந்த குழந்தைகளுக்கே இந்தத் தொற்றுக்கான அறிகுறிகள் கண்டறியப்பட்டுள்ளன.

இனங்காணப்பட்ட நோயாளர்களில் இருவர் தாமதமாகவே நோயைக் கண்டறிந்துள்ளனர். நோய்க்கான அறிகுறிகள் தென்பட்ட உடனேயே விரைந்து பரிசோதனைகளைச் செய்து உறுதிப்படுத்தியிருந்தால் சிகிச்சை மூலம் அவர்களைக் காப்பாற்றியிருக்க முடியும் என்று 'உதயன்' பத்திரிகைக்குத் தகவல் தந்த மருத்துவர் தெரிவித்தார்.

எய்ட்ஸ் நோயாளர்கள் உயிரிழுப்பதை நீண்ட காலத்திற்குத் தள்ளிப்போடும் அளவுக்கு தற்போது சிகிச்சை வசதிகள் இருப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டினார். சிகிச்சையைப் பெற்றுக்கொண்டால் சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுடன் சமூகத்தில் ஏனையவர்களைப் போல் எய்ட்ஸ் நோயாளர்களும் வாழ முடியும் என்றும் அவர் கூறினார்.

அடையாளம் காணப்பட்டவர்கள் தவிர மேலும் பலருக்கும் யாழ். குடாநாட்டில் எய்ட்ஸ் நோய் உள்ளது என்ற அச்சம் மருத்துவ வட்டாரங்களில் பரவலாக இருப்பதாக அந்த மருத்துவர் மேலும் தெரிவித்தார். "தாமாக முன்வந்து தமக்கு எய்ட்ஸ் உள்ளதா என்பதனைப் பரிசீலிப்பது யாழ்ப்பாணத்தில் மிக மிகக் குறைவாகவே உள்ளது. தமக்கு எச்.ஐ.வி. தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்பு இருந்தது என்று கருதும் எவரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உள்ள எய்ட்ஸ் தொடர்பான சிகிச்சைப் பிரிவை நாடமுடியும் என்றும் அவர்களின் இரகசியங்கள் மிக இறுக்கமாகப் பேணப்படும் என்றும் அவர் கூறினார்.

இந்த வருடம் இனங்காணப் பட்ட எய்ட்ஸ் நோயாளர்களை ஆய்வு செய்ததில், இளம் பெண்கள் குறிவைக்கப்பட்டு எய்ட்ஸ் நோய் பரப்பப்படுகிறதோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளதாகவும் மருத்துவர் தெரிவித்தார்.

"ஏமாற்றப்பட்டோ இளவயதுத் திருமணங்கள் மூலமாகவோ தவிர்க்க முடியாத சந்தர்ப்ப சூழ்நிலைகளில் விரும்பியோ விரும்பாமலோ பதின்ம வயதுச் சிறுமிகளும் இளம் பெண்களும் பாலியல் உறவை ஏற்படுத்திவிடுகிறார்கள். உறவில் ஈடுபடுந் ஆணுக்கு எய்ட்ஸ் நோய் இல்லை என்பதற்கு என்ன உத்தரவாதம்? அவ்வாறான சந்தர்ப்பங்களில் பல சிறுமிகள், இளம் பெண்கள் எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளாக்கப் பட்டிருக்கும் பயங்கரம் இடம் பெற்றிருக்கிறது என்று அஞ்ச வேண்டியிருக்கிறது. இந்த வருடத்தில் கண்டறியப்பட்ட எய்ட்ஸ் நோயாளர்களின் எணிக்கை அதிகரிப்பு அதற்கு எடுத்துக்காட்டு" என்றார் அந்த மருத்துவர்.

எனவே பதின்ம வயதுடை சிறுமிகள், இளம் பெண்கள் பாலியல் உறவு குறித்து மிக அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அவர் எச்சரித்தார். (உ-4)

## மஹிந்த

கிரகப் பெயர்ச்சி குறித்து நான் கூறியது பலித்துள் ளது' என்று அமைச்சர் மேர்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார்.

சிங்கள இணையத்தளம் ஒன்று இந்தச்செய்தியை வெளியிட்டுள்ளது. அந்தச் செய்தியில் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்ததை அப்படியே வெளியிட்டுள்ளனர்.

'எப்படி இருக்கிறது மேர்வின் கூறிய கிரகப் பெயர்ச்சி. இலங்கையில் இருக்கும் சிறந்த ஜோதிடன் வேறு யாருமல்ல மேர்வின் சில்வாதான்' என்று அவர் தெரிவித்துள்ளார்.

அரசு மற்றும் எதிர்க்கட்சியின் தலைவிதி மேர்வின்கையிலேயே உள்ளது. நேற்றுப் (நேற்று முன் தினம்) பெரிய கிரகம் ஒன்றும் சிறிய கிரகங்களின் பெயர்ச்சியும் இடம்பெற்றது. அரசுக்குத் தலைச் சுற்று ஏற்படும் கிரகப் பெயர்ச்சி எதிர்காலத்தில் இடம்பெறும்.

ஜனாதிபதிக்கு இந்தச் சகல கிரக பெயர்ச்சிகளையும் நிறுத்த முடியும். எனினும் அவரைச் சுற்றியுள்ள தவளைக் கிரகங்கள் அதற்கு இடமளிப்பதில்லை. இந்தத் தவளைக் கிரகங்கள் இணைந்து ஒரு நாள் அவருக்கு முடிவு கட்டிவிடும்.

எனதுமகனை வேண்டுமென்றே சிறையில் தடுத்து வைத்துள்ளனர். திருமணம் செய்து இரண்டு வாரங்கள்தான். அடி வாங்கியது எனது மகன். எனது மகனை சிறையில் அடைத்து இவர்கள் தேர்தலில் வெற்றி பெறப் பார்க்கின்றனர். எனது பொறுமைக்கும் எல்லையுண்டு. இப்படியே சென்றால் நானும் தீர்மானம் ஒன்றை எடுக்க நேரிடும். ஆனால் நான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விட்டுச் செல்லப் போவதில்லை. சிறையில் இருந்த அனுபவங்கள் எனக்கு பழக்கமானது. அடுத்த வருடம் எனக்கு 72 வயது. ஒன்றை மனத்தில் வைத்து கொள்ளுங்கள். ஜே.ஆர். 72 வயதிலேயே பதவிக்கு வந்தார்-என்று மேர்வின் தெரிவித்தாக அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-5)

## விரைவில்

தொடர்ந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்டம் கண்டுள்ளது. இந்தச் சரிவிலிருந்து மீள்வதற்காகவும் அரசு பக்கம் இருந்து எதிரணி பக்கம் தாவுவதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்று கூறப்படுபவர்களைத் தடுப்பதற்காகவும் அமைச்சரவையை மாற்றியமைத்து முக்கிய அமைச்சுக்களை சுதந்திரக்கட்சியின் மூத்த தலைவர்களுக்கு வழங்குவதற்குத் திட்டமிடப்படுவதாகக் கூறப்படுகின்றது. கட்சிக்குள் இருந்த மூத்த தலைவர்களை ஓரங்கட்டி தனது குடும்ப உறுப்பினர்களுக்கு மஹிந்த ராஜபக்ஷ முன்னுரிமை அளித்தமையே சுதந்திரக் கட்சியினருக்குக் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகின்றது. அதனாலேயே அவர்கள் தருணம் பார்த்து மஹிந்தவைக் கைவிட்டு வெளியேறி வருகின்றார்கள். இந்த இக்கட்டு நிலைமையைச் சமாளித்து தனது ஆதரவு சரியாமல் பார்த்துக் கொள்வதற்காக ஓரிரு தினங்களில் அமைச்சரவை மாற்றத்தை மஹிந்த அறிவிக்கவுள்ளார் என்று கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள் கூறுகின்றன.

பிரதமர் தி.மு.ஜயரத்னவை அந்தப் பதவியிலிருந்து விலகச் சொல்லிவிட்டு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவை பிரதமராக நியமிக்க மஹிந்த திட்டமிடுவதாகவும் கூறப்படுகின்றது. சுதந்திரக் கட்சி ஆதரவாளர்களைச் சாந்தப்படுத்தும் வகையில் இந்த நகர்வு திட்டமிடப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் கட்சிதாவவுள்ள அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தடுக்கும் நோக்கில் அவர்களுடன் பேச்சு நடத்தும் பொறுப்பு ஜனாதிபதியின் சகோதரரும் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷவிடம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அடுத்த வாரத்துக்குள் புதிய அமைச்சரவை அமைக்கப்படும். அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புதிய அமைப்பாளர்களும் விரைவில் நியமிக்கப்படுவர் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதன்போது கட்சியில் நீண்ட காலமாக இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று தெரிகிறது.

ஏற்கனவே மைத்திரிபால சிறிசேனவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் பதவியில் இருந்து நீக்கியுள்ளதாக ஜனாதிபதி அறிவித்துள்ள நிலையில், அவரது இடத்துக் அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா நியமிக்கப்பட்டுள்ளார் என்று உறுதியான தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமைச்சர் மைத்திரிபால இதுவரை வகித்து வந்த பொலன்னறுவை மாவட்ட கட்சி அமைப்பாளர் பதவிக்கு பிரதி அமைச்சரான சிறிபால கம்லத் நியமிக்கப்பட்டுள்ளார். (உ-5)

# பாடும்மீனை அசத்தலாக வீழ்த்தி இறுதிக்குள் நுழைந்தது கலைமதி

## சென். மேரிஸுடன் மைலோ கிண்ணத்துக்கு மோதல்



சென். மேரிஸ் விளையாட்டுக்கழகம்



கலைமதி விளையாட்டுக்கழகம்

யாழ்ப்பாணம், நவ. 23
மைலோ வெற்றிக் கிண்ண இறுதியாட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணியும் நவிண்டில் கலைமதி அணியும் மோதவுள்ளன. நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டங்களில் அசத்தலான வெற்றியைப் பெற்றதன் மூலம் இரு அணிகளும் இறுதிக்கு முன்னேறின.

யாழ்ப்பாணத்தின் பலம்மிக்க அணிகளில் ஒன்றான பாடும் மீன் அணியை அற்புதமாகச் சமாளித்து. அதற்கெதிராக அசத்தலான ஒரு கோல் அடித்து இறுதிக்கு முன்னேறியது கலைமதி.

முதல் அரையிறுதி ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை நவிண்டில் கலைமதி எதிர் கொண்டது. பாடும்மீன் முன்னேறித் தாக்குவதில் குறியாக இருந்தது. எனினும் கலைமதியின் தடுப்பரண் பலமாக இருந்தது. அதனை ஊடறுத்து உள்நுழைந்து கோல் அடிக்க பாடும்மீனால் முடியவில்லை. கலைமதியின் கோல் பரப்பு வரை பல தடவைகள் பாடும்மீனால் முன்னேற முடிந்தபோதும் கலைமதி தடுப்பாளர்கள் அவர்களைத் தடுத்து நிறுத்தினார்கள்.

கடுமையான போராட்டத்தின் பின்னர் இரண்டு தடவைகள் பாடும்மீன் அணியினருக்குக் கிடைத்த இரு அருமையான சந்தர்ப்பங்களை கோலாக்க அவர்கள் தவறினார்கள். நவிண்டில் கலைமதியும் கோல் அடிப்பதற்கான எத்தனங்களைச் செய்தபோதும் பாடும்மீனின் ஊடறுப்பைத் தடுத்து நிறுத்துவதிலேயே முதல்பாதி முழுவதும் கவனமாக இருந்தார்கள். இடையிடையே கிடைத்த சில வாய்ப்புகளை நன்கு பயன்படுத்த அவர்களும் தவறியிருந்தனர். இதனால் இடைவேளை வரையில் இரு அணிகளுமே கோல் எதனையும் அடிக்கவில்லை.

ஆட்டம் மீண்டும் ஆரம்பமான போது இரு அணியினருக்கும் அடுத்த அரைமணி நேரம் வாழ்வா சாவா கணங்களாகின. 37ஆவது நிமிடத்தில் நடுவிலிருந்து திடீரென முன்னேறிய கலைமதி வீரர் ராஜிக்காந், பாடும்மீனின் பின்காவலை ஊடறுத்து நுழைந்து, கிடைத்த பந்தைச் சரியாக உதைத்து முதல் கோலைப் பெற்றார்.

இது பாடும்மீன் அணிக்கு மேலும் அழுத்தத்தை ஏற்படுத்தியது. பதில் கோல் அடிப்பதற்கு முயன்ற அவர்கள் பல தவறுகளை விட்டார்கள். நேரம் செல்லச் செல்ல அவர்களிடம் ஏற்பட்ட பதற்றம் ஆட்டத்தில் மோசமான தவறுகளுக்கு வித்திட்டது. அந்தப் பலவீனத்தைப் பயன்படுத்திக்கொண்ட கலைமதி தனது தடுப்பாட்டத்தை மேலும் இறுக்கி பாடும்மீன் கோல் அடிக்காமல் பார்த்துக் கொண்டது. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் பாடும்மீன் மீது அசத்தலான வெற்றியைப் பதிவு செய்தது கலைமதி.

இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் நவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர் கொண்டது உடுப்பிட்டி நவஜீவன்ஸ். ஆட்டம் விறுவிறுப்பாக இருந்தது. 15அவது நிமிடத்திலேயே சென்.மேரிஸ் வீரன் விக்டர் பந்தை லாவகமாகத் தூக்கிக் கொடுக்க, யூட் அதனைத் தலையால் மோதி கம்பங்களுக்குள் செலுத்தினார். பதிலுக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களை உடுப்பிட்டி நவஜீவன்ஸ் வீணாக்கியது. 28 ஆவதுநிமிடத்தில் சென். மேரிஸ் தனது இரண்டவது கோலை அடித்தது. ஜெனட் அந்த கோலை அடித்தார். அத்துடன் ஆட்டம் சென். மேரிஸின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

இடைவேளையின் பின்னர் நவஜீவன்ஸ் முன்னேறித் தாக்க முயற்சித்தபோதும் சென். மேரிஸ் மேலும் கோல்களை அடிக்காமல் தடுப்பதில் அதிக கவனம் செலுத்தியது. இதனைச் சாதகமாக்கிக்கொண்ட சென்.மேரிஸ் தொடர்ந்து நவஜீவன்ஸின் கோல் பரப்பை ஆக்கிரமித்தபடி இருந்தது. 48ஆவது நிமிடத்தில் சென். மேரிஸ் மூன்றாவது கோல் போட்டது. யூட் மீண்டும் கோல் அடித்தார். முடிவில் சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வென்றது.(உ-23)

## இறுதியாட்டம் இன்று



யாழ்ப்பாணம் நவ 23
மைலோ வெற்றிக்கிண்ணத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மதியம் 2 மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம் பெறவுள்ளது. இறுதியாட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. காலை 10 மணிக்கு இடம் பெறும் மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன்விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டிநவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக யாழ்.அரச அதிபர் சுந்தரம்அருமைநாயகம்நெஸ்லே லங்க. பி.எல்.சியின் விற்பனை மேம்பாட்டு நடவடிக்கை முகாமையாளர் சஜீவ விக்கிரமசிங்க, நெஸ்லே லங்க. பி.எல்.சியின் வடக்கு பிரத்திய விற்பனை முகமையாளர் எஸ்.ரவிந்திரன். ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-23)

## தொடர்ச்சிகள்...

### வடக்கு

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ். அலுவலகத் துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்டனர்.

இந்திய மீனவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கிய அரசு அவர்களுடன் கைதான இலங்கை மீனவருக்கு மட்டும் தண்டனை வழங்குவது எவ்வகையில் நியாயம் எனவும் அவர்கள் கோரினர்.

போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 8 மீனவர்களில் 5 இந்திய மீனவர்கள் பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுவிக்கப்பட்ட நிலையில் இலங்கை யின் வடபகுதியைச் சேர்ந்த ஏனைய 3 மீனவர்களும் தூக்குத் தண்டனைக் கைதிகளாகவே தொடர்ந்தும் இலங்கை அரசினால் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர். இதனைக் கண்டித்தே நேற்று இந்த ஆர்ப் பாட்டம் இடம்பெற்றது.

இதன்போது அங்கு வந்த அமைச்சர் டக்ளஸ், இந்திய மீனவர்களை விடுவித்தவுடனேயே இலங்கை மீனவர்களை விடுவிக்க வேண்டும் என எண்ணுவது தவறு. ஏனெனில் இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையிலான நட்புறவைத்தொடர்ந்தும்நல்லமுறையில் பேணும் நோக்கத்துடனும், இரு நாடுகளுக்குமிடையே இருக்கும் கைதிப் பரிமாற்ற உடன்படிக்கையைத் தொடர்ந்தும் தக்கவைக்கும் நோக்கத்துடனுமே இந்திய மீனவர்கள் விடுவிக்கப்பட்ட னர் என்று கூறினார்.

நான் இவ்விடயம் தொடர் பாக ஜனாதிபதிக்கு நேரிலும் தொலைபேசியிலும் அழுத்தம் கொடுத்து இரண்டு நாள்களின் பின் சுமுகமான தீர்வைப் பெற்றுத் தருவேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சர் இவ்வாறு கூறி விட்டுச் சென்றதும் ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்ட குறித்த மீனவர் களின் மனைவிமார் மற்றும் உறவினர்கள் பொதுமன்னிப்பு என்று சொல்கிறார்கள். பின்னர் ஏன் இந்தியா, இலங்கை என்கிறார்கள். ஒரே குற்றம்ஒரேவழக்கு ஆனால்இரண்டு தீர்ப்பா? இது எந்த வகையில் நியா யம். இந்தியாவின் குரல் காதுக்கு எட்டுகின்றது. ஆனால் எமது குரல் காதுக்கு எட்டவில்லையா. இரண்டு நாள்க ளின் பின்னர் மீண்டும் வருவோம். நாம் எதிர்பார்க்கும் தீர்வு கிடைக்கவில்லையா யின் இவ்விடத்தை விட்டுச் செல்லமாட்டோம். முழுதாக முற்றுகையிடுவோம் என அழுது புலம்பிச் சென்றனர். (த-ரி)

### இராணுவச்

கள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

குறித்த சிறுமி யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர். இப்போது திருமணமாகி வாழ்கிறார். சிறு மியாக இருந்த போது அவர் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப் பட்டார். இராணுவச் சிப்பாய்கள் இருவர் மீது குற்றஞ் சாட்டப் பட்டது. அது தொடர்பான வழக்கு கடந்த பல வருடங்களாக யாழ். மேல் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

தீவிர விசாரணைகளின் முடிவில் குற்றஞ்சாட்டப்பட்ட சிப்பாய்களில் ஒருவர் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டது. மற் றையவர் மீதான குற்றம் நிரூபிக்கப்படவில்லை.

குற்றவாளியான சிப்பாய்க்கு 10 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்த நீதிமன்றம், மற்றைய சிப்பாயை விடுவித்துத் தீர்ப்பளித்தது. பத்து நாள்களுக்கு முன்பாக இந்தத் தீர்ப்பு யாழ். மேல் நீதிமன்றினால் வழங்கப்பட்டிருந்தது. (உ-4)

### தேர்தலில்

நிலையை வெளிப்படுத்த வில்லை. எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் கருத்துக்களை வரவேற்ற கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இருப்பினும் ஜனாதிபதி வேட்பாளர்களில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் இன்னமும் இறுதி முடிவு எட்டவில்லை என்று குறிப்பிட்டிருந்தார். இது தொடர்பில் கூட்டமைப்பு கூடி ஆராயவேண்டும் என்றும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே, யாரை ஆதரிப்பது? என்ன நடவடிக்கை என்பது தொடர்பில் ஆராய்வதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுக் கூட்டம் நாளை திங்கட்கிழமை இடம் பெறவுள்ளது.

இதன் பின்னரே, கூட்டமைப்பு யாரை ஆதரிக்கும் என்பது தொடர்பில் வெளிப்படையாகக் கருத்து வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (கு-5)

## பருத்தித்துறை லீக் அரையிறுதி இன்று

யாழ்ப்பாணம், நவ. 23
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நடத்தும் ஆளுநர் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி யின் ஆட்டங்கள் நேற்று சனிக்கிழமை அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றன. அரையிறுதி ஆட்டங்கள் இன்றைய தினம் இடம்பெறவுள்ளன. .

பி.ப 3 மணிக்கு இடம் பெறும் அரையிறுதியாட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சக் கோட்டைசென். சேவியர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வல்வை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

நேற்றுக் காலை 9 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் ஆதி சக்தி விளையாட்டுக்கழக அணியும் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணியும் மோதின. இரண்டு அணியினரும் எது வித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றிதோல்வி காண்பதற்காக சமநிலை தகர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. 10 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் வல்வை விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

பி.ப 3 ம்ணி ஆட்டத்திற்கு வெற்றிலைக்கேணி சென். செபஸ்ரியன் விளையாட்டுக் கழகம் சமூகம் தராமையால் சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

மாலை 4 மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் மோதியது. பலாலி விண்மீன் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (உ-23)




## உலகக் கிண்ண கிரிக்கெட்டில் இந்தியா சம்பியனாவது கடினம்

அடுத்தாண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இந்தியா சம்பியனாவது கடினம் என நியூசிலாந்து அணி முன்னாள் தலைவர் ஸ் ரீபன் பிளமிங் தெரிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டுக்கான உலக கிண்ணக் கிரிக்கெட் போட்டித்தொடர் ஆஸ்திரேலிய மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளில் நடைபெறவுள்ளது.

தற்போது உலகக் கிண்ணத்தை வெல்லப் போவது யார் என்று முன்னாள் வீரர்கள் பலர் ஆரூடம் சொல்லி வருகிறார்கள்.

உலகக் கிண்ணத் தொடருக்கு முன்பாக இந்திய அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடுகிறது.

இந்தப் போட்டி தொடர் இந்தியாவுக்கு உலக கிண்ணத்தில் சிறப்பாக செயல்பட உதவும் என்று அணித் தலைவர் டோனி, வி.வி.எஸ்.லட்சுமணன் தெரிவித்து உள்ளனர்.

இந்த நிலையில் உலக கிண்ணத்தை வெல்ல இந்தியாவுக்கு வாய்ப்புக் குறைவு என்று ஸ்ரீபன் பிளமிங் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கருத்து வெளியிடுகையில்,

உலகக் கிண்ணத்தை வெல்ல நான் 4 அணிகளுக்கு முன்னுரிமை கொடுப்பேன். முதலில் நியூசிலாந்து மற்றும் ஆஸ்திரேலிய அணிகளுக்கு வாய்ப்பு அதிகமாக இருக்கிறது.

ஏனென்றால் போட்டித் தொடர் இந்த நாடுகளில் நடக்கின்றது. இது அந்த அணிகளுக்கு சாதகமானது. 3 ஆவது அணியாகத் தென்னாபிரிக்கா இருக்கிறது. அந்த அணி நல்ல நிலையில் இருக்கிறது.

நான்காவது இடத்துக்கு கடும் போட்டி இருக்கிறது. இதில் இந்தியா, பாகிஸ்தான், மேற்கிந்திய தீவுகள், இலங்கை ஆகிய அணிகள் உள்ளன. ஆஸ்திரேலியாவின் வேகப்பந்து வீச்சு நன்கு எடுபடும். இந்திய வேகப்பந்து வீச்சு மோசம் என்று சொல்ல மாட்டேன். ஆனால் விக்கெட்டுகளை கைப்பற்றுவது அவசியம். வேகப்பந்து வீச்சே முக்கிய பங்கு வகிக்கும். இதனால் அதில் சிறப்பாக செயல்படுவதே வெற்றியை அடைய உதவும் என்றார். (த)

# ஆஸியை வீழ்த்துவோம்

ஆஸ்திரேலிய அணியை அவர்களது சொந்த மண்ணில் வீழ்த்த முடியும் என்று இந்திய அணியின் பதில் தலைவர் விராட் கோஹ்லி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இந்திய அணி நான்கு டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது.

இரு அணிகளும் மோதும் முதலாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் நான்காம் திகதி பிரிஸ்பேனில் ஆரம்பமாகவுள்ளது. விரலில் ஏற்பட்டகாயம் காரணமாக முதலாவது டெஸ்டில் மட்டும் இந்திய அணித் தலைவர் டோனி ஆடமாட்டார். அதற்கு பதிலாக விராட் கோஹ்லி அந்த டெஸ்டில் இந்திய அணியின் தலைவராக செயல்படுவார்.

19 பேர் அடங்கிய இந்திய அணியினர் மும்பையில் இருந்து ஆஸ்திரேலியாவுக்கு புறப்பட்டனர். முன்னதாக இந்திய பதில் தலைவர் ஊடகங்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

எங்களது டெஸ்ட் அணி வீரர்களின் திறமை மீதும், மனோதிடம் மீதும் நாங்கள் மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளோம். ஒவ்வொரு வீரர்களும் ஆவுஸ்திரேலியாவில் உள்ள சவாலை எதிர்கொள்ள ஆர்வமாக இருக்கிறார்கள்.



அங்கு நடக்கும் போட்டிகளில் ஆக்ரோஷத்துடன் எச்சரிக்கையாக ஆட வேண்டியது அவசியம். முதலில் நம்மால் சமாளிக்க முடியும் என்ற மனநிலை இருக்க வேண்டும். அதன் பிறகு ஆக்ரோஷ பாணியை வெளிப்படுத்தி, ஆட்டத்தை நம் வசப்படுத்த வேண்டும். இந்த மாதிரியான மனநிலையை உருவாக்கி கொள்வது தான் போட்டியின் பிரதான யுக்தி.

டெஸ்ட் தொடரில் களம் காணும் 11 பேர் கொண்ட அணியில் சரியான வீரர்களை அடையாளம் கண்டு பயன்படுத்த வேண்டும். ஏனெனில் டெஸ்ட் போட்டியில் எப்போதும் சரியான கூட்டணியை களம் இறக்கி, அவர்களுக்கு நம்பிக்கை அளிக்க வேண்டியது முக்கியம்.

எல்லா நேரமும் வெற்றி மட்டுமே மனதில் இலக்காக இருக்க வேண்டும். ஆஸ்திரேலியாவை அதன் சொந்த மண்ணிலேயே தோற்கடிக்க எங்களுக்கு நல்ல வாய்ப்புள்ளது. இதற்கு முன்பு நாங்கள் அவர்களை அவர் களது இடத்தில் வீழ்த்தியிருப்பதை மறந்து விடக்கூடாது. அதேபோன்று ஏன் மீண்டும் அவர்களைத் தோற்கடிக்க முடியாது? அணியில் உள்ள எல்லா வீரர்களுக்கும் ஆக்ரோஷமாக ஆடக்கூடிய பாங்கு உண்டு.

விரைவில் உலகக் கிண்ணப் போட்டி வர இருந்தாலும், முதலில் எங்களது கவனம் டெஸ்ட் தொடரில் மட்டுமே இருக்கும். அதன் பிறகு முத்தரப்பு கிரிக்கெட் தொடர் முடிந்த பிறகே உலக கோப்பை குறித்து சிந்திப்போம். ஆவுஸ்திரேலியாவில் உலகக் கிண்ணப் போட்டி நடக்க உள்ள நிலையில், அதற்கு முன்பாக அவ்விடத்திலேயே விளையாட வாய்ப்பு கிடைத்தது நாங்கள் செய்த பாக்கியம். உலக கோப்பைக்கு முன்பாக அங்குள்ள சூழலை பழக்கி கொள்வதற்கு இந்தத் தொடர் உதவும்.

2011-12 ஆம் ஆண்டு ஆஸ்திரேலிய டெஸ்ட் தொடரில் இந்திய அணி 0-4 என்ற கணக்கில் தோற்றாலும் தனிப்பட்ட முறையில் அந்தத் தொடர் எனது வாழ்க்கையில் மைல் கல்லாக (சதம், அரைசதம் உள்பட 300 ஓட்டங்கள் எடுத்தார்) அமைந்தது. ஆவுஸ்திரேலிய பயணத்தை முடித்து விட்டு கிளம்பிய போது நான் முற்றிலும் வித்தியாசமான மனிதராக, வித்தியாசமான வீரராக மாறியிருந்தேன்.

தற்போது முதலாவது டெஸ்டில் அணித் தலைவராக பணியாற்ற வாய்ப்பு கிடைத்திருப்பது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. எனது கனவு நனவானது போன்று உள்ளது. டெஸ்ட் தொடரை நாங்கள் நல்ல முறையில் தொடங்குவோம் என்று நம்புகிறேன்.

எங்களது முழுக் கவனமும் கிரிக்கெட் மீதே இருக்கிறது. களத்திற்கு வெளியே (ஐ.பி.எல். சூதாட்ட பிரச்சினை) நடக்கும் விடயங்களை பற்றி நாங்கள் கவலைப் படவில்லை. அது தொடர்பாக எதுவும் விளக்கம் தேவை என் றால், அதை அணி நிர்வாகம் பார்த் துக் கொள்ளும். மற்ற விவகாரங்களால் கவனம்சிதறவில்லைஎனகோஹ்லி மேலும் தெரிவித்துள்ளார். (த)




## விடைபெறுகிறார் சங்கக்கார

இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர ஆட்டக்காரர் சங்கக்கார சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவது பற்றி அறிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் அசத்தல் வீரராக வலம் வரும் சங்கக்கார அடுத்த ஆண்டு நடக்கவுள்ள உலகக்கிண்ணப் போட்டிகளுக்கு பிறகு அனைத்து விதமான சர்வதேசப் போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெறவிருப்பதாக தெரிவித்துள்ளார்.

இதனை ஆங்கில ஊடகம் ஒன்று அறிவித்துள்ளது. எனினும் இலங்கைக் கிரிக்கெட் சபையினால் இந்தத் தகவல் உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தப்படவில்லை.

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளின் பின்னர் சங்கக்கார ஓய்வு பெறும் பட்சத்தில் எதிர்வரும் நவம்பர் மாதம் 26ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இங்கிலாந்துக்கு எதிரான [illegible] ஒருநாள போட்டித் தொடரே இலங்கை மண்ணில் சங்கக்கார சந்திக்கும் இறுதிப் போட்டியாக அமையும். பங்களாதேஷில் நடைபெற்ற 20/20 உலகக் கிண்ணப் போட்டிகளின்போதே 'நான் 2015 ஆம் ஆண்டு உலகக்கிண்ணப போட்டிக்கு பிறகு ஓய்வு பெறுவேன்' என சங்கக்கார அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)




## முதலிடத்துக்கு ஆபத்து

ஒருநாள் போட்டி கிரிக்கெட் வரிசையில் இந்திய அணி முதலிடம் வகிக்கிறது. இலங்கைக்கு எதிரான ஒருநாள் போட்டி தொடரை 5-0 என்ற கணக்கில் கைப்பற்றிய இந்தியா 11% புள்ளிகள் பெற்று உள்ளது.

2 ஆவது இடத்தில் 116 புள்ளிகளுடன் ஆஸ்திரேலியா இருக்கிறது. ஆஸ்திரேலிய அணி இன்று நடக்கும் 5 ஆவது ஒரு நாள் போட்டியில் தென்னாபிரிக்காவுடன் மோதுகிறது.

இந்தப் போட்டியில் ஆஸ்திரேலியா வென்றால் முதலிடத்தைப் பிடிக்கும். இந்தியா 2 ஆவது இடத்துக்கு செல்லும்.

இல்லையேல் ஆஸ்திரேலியா தோற்றால் இந்தியா முதலிடத்திலேயே நீடிக்கும். (த)

## வேலையாள்கள் தேவை

★ பள்ளிவாசல் கட்டடம் கட்டுவதற்கு, தச்சு தொழிலாளிகள் (Shuttering) / கம்பி வேலை செய்பவர்கள் (Bar benders) / மேசன்மார் தேவை.

விவரங்களுக்கு:


021 320 2726, 077 375 1803

★ கொடிகாமம் வங்கிக் கட்டடம் கட்டுவதற்கு மேசன்மார் / மார்பிள் பதிக்க கூடிய மேசன்மார் / கார்பென்டர்ஸ் / பார்பென்டர்ஸ் உடனடியாகத் தேவை.

விவரங்களுக்கு:

071 328 6711, 077 458 0461, 0773751803

## புதிய சொகுசு தொடர்மாடி வீட்டுத் தொகுதி




இரம்மியமான சூழலில் முகாமைத்துவ பீடத்திற்கு அருகில் நல்லூரில் இருந்து 2 ½ km தூரத்தில் (இராஜ வீதி) பிரபல்ய பொறியியலாளர் ஒப்பந்தகாரர் களால் வாஸ்து முறைப்படி புதியதாக அமைக்கப்பட இருக்கிறது.

- வாகன தரிப்பிட வசதி, Gym, Party Hall, நீச்சல் தடாகம், சிறுவர் பூங்கா, விளையாட்டு மைதானம், Indoor Games.
- திருநெல்வேலி, கல்வியங்காடு சந்தைக்கு மிக அருகில்.
- 24 h பாதுகாப்பு சேவை.

முன்பதிவுகளுக்கு 077 1512032

## யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்.மாவட்டச் செயலகத்தில் எதிர்வரும் புதன்கிழமை இடம்பெறவிருந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட செயலக உதவித் திட்டமிடல் பணிப் பாளர் எஸ்.சிவபாலா அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி இடம்பெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் தற்போது அது ஒத்திவைக்கப் பட்டுள்ளது. ஆனாலும் அன்று காலை 9 மணிக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வேலைத் திட்டங்கள் மீதான மீளாய்வு இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

### வீடு வாடகைக்கு தேவை

யாழ். நகரை அண்மித்ததாக வைத்திய குடும்பம் ஒன்றுக்கு வீடு வாடகைக்குத் தேவை. வாகனத் தரிப்பிட வசதி விரும்பத்தக்கது.

தொடர்பு:0777 531461, 077 593 6369


### விற்பனைக்கு

துண்டு சிப்போட் விற்பனைக்கு உண்டு.

T.P: 077 831 4201

Tel- 077 248 7082

Multi STC Dongle 7.2 Mbps



2499/=

01 வருட உத்தரவாதத்துடன்.

Micro System Development Center
Alady Junction, Jaffna Road, Manipay.

### German Language Academy

கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி

ஜேர்மன், சுவிஸ், டொச் மொழிகள் இலகுவான வழியில் வெளிநாடு செல்பவர்களுக்கான A1 பரீட்சைக்கு ஏற்றவாறு S.கோணேஸ்வரன் ஆசிரியரால் கற்பிக்கப்படுகின்றது.

புதிய பிரிவுகள் ஆரம்பம் : 24.11.2014 திங்கள் 8.30

அனுமதிப்பு தொடர்புகொள்ள பின்பு நேரில் வரவும்

T.P: 077 9707 322
ஆரியகுளம், யாழ்ப்பாணம்.

# உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

### INSTITUTE OF MEDICAL SCIENCES
### Green memorial hospital, Manipay

Email: theimsjaffna@gmail.com
Website:www.theims.net
Tel: (021)3202688

Vacancy for Physiotherapist / coordinator

The Institute of medical sciences is conducting a one year Diploma course in community based Rehabilitation for 22 students at Green Memorial Hospital, Manipay, during the weekends.

A vacancy exists for a Physiotherapist /Coordinator on a full time or part time basis.

Applicants must be a qualified physiotherapist (preferably a graduate) with experience in teaching physiotherapy. The applicant should be prepared to work at the Neuro rehabilitation Centre at Green memorial hospital, Manipay when required.

The contract will initially be for one year

Applicants are requested to apply to the under mentioned address, giving a detail CV, work experience (especially teaching and training), current employment status, available time and remuneration expected

Applications close on the 01st December, 2014

Director
INSTITUTE OF MEDICAL SCIENCES
Green Memorial Hospital, Manipay
Email: theimsjaffna@gmail.com
Website:www.theims.net
Tel: (021)3202688

### இன்று முதல் மீண்டும் சிவப்பிரகாசம் வீதியில்

நத்தார் பண்டிகையை முன்னிட்டு மாபெரும் சிறப்பு தள்ளுபடி

வீட்டு, அலுவலக தளபாடங்களை மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

அலுமாரி (வீட்டுபாவனைக்குரியது) ~~14750/=~~ 8990/=
மரக்கட்டில் ~~8750/=~~ 6100/=
பிளாஸ்டிக் கதிரை ~~900/=~~ 625/=
Sofa ~~45500/=~~ 32900/=
மெத்தை ~~4116/=~~ 2320/=

15, சிவப்பிரகாசம் வீதி, (தட்டாதெரு சந்தி)
077 180 7672, 077 831 4201

## FOR THE FIRST TIME IN JAFFNA....

## IT/BPM EXPORT FORUM & ENTREPRENEURSHIP WORKSHOP

"Accelerating IT Exports and Fostering Entrepreneurship"

REGISTER NOW!

**5 December 2014**

Tilko City Hotel, Jaffna

A one-of-a-kind opportunity to interact and learn from some of Sri Lanka's leading enterpreneurs and IT experts!

To register, please visit www.jaffnaitweek.com or call Pamodi on 0716-6966999.

EVENT SPEAKERS



Saman Maldeni – Director – Export Services EDB
Dr. Sanjiva Weerawarana – Founder, Chairman and CEO of WSO2
Reshan Dewapura – CEO of ICTA
Mangala Karunaratne – Founder and CEO of Calcey
Madu Ratnayake – Head of Digital, SVP & General Manager at Virtusa



Dr. Harsha Subasinghe – CEO & Chief System Architect of CodeGen
Fayaz Hudah – Programme Head of ICT Agency of Sri Lanka (ICTA)
Dr. Arul Sivagananathan – Managing Director Hayleys Industrial Solutions and Hayleys BPO
Ruwindhu Peiris – Managing Director of Stax Inc.
Mano Sekeram – Co-Founder and CEO of 99X Technology

Organized By ICTA EDB
Supported By SLASSCOM
Official Bank NDB bank
JAFFNA IT WEEK www.jaffnaitweek.com
Exclusive Mobile Partner Sri Lanka Telecom Mobitel

## 55 ஆவது ஆண்டு நிறைவு நன்றி செலுத்தும் ஆராதனை



1959 - 2014

எபெனேசர் - இம்மட்டும் கர்த்தர் எங்களுக்கு உதவி செய்தார். I சாமுவேல் 7 : 12

சீயோன் தேவாலயம், யாழ்ப்பாணம்

ஆண்டவருடைய கிருபைகளுக்காக நன்றி செலுத்துகின்றோம்.

நன்றி செலுத்தும் ஆராதனை 29.11.2014 (சனிக்கிழமை) காலை 10மணிக்கு தலைமை ஆலயத்தில் நடைபெறும்.

ஆயர்கள், போதகர்கள், ஊழியர்கள் மற்றும் விசுவாசிகள், இல 24, இராமையாச் செட்டியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம்

சிவமயம்

கோபுர தரிசனம் கோடி புண்ணியம்

## தென்னிந்திய தெய்வ தரிசனம்

(கோயில்கள் சுற்றுலாத் தலங்கள் உள்ளடக்கம்)



தரிசனம் : 15 நாள்கள் புறப்படும் திகதி : 14.12.2014

ஐம்பூதஸ்தலங்கள், ஆறுபடைவீடு, நவக்கிரக கோயில்கள், சிதம்பரம், சீகாழி, மதுரை மீனாட்சி, உச்சிப்பிள்ளையார், ஸ்ரீரங்கம்,திருப்பதி, 22 புனித கிணறுகளில் நீராடல், சென்னை சீரடிபாபா, உட்பட 40 இற்கும் மேற்பட்ட கோயில்களையும், அண்ணா, எம்.ஜீ.ஆர். நினைவு சதுக்கங்கள், மெரினா கடற்கரை மற்றும் சுற்றுலாத் தலங்களையும் இந்தப் பயணத்தின் போது பார்வையிடலாம்.

உள்ளடக்கப்பட்டவைகள் :

இரு வழி விமானக்கட்டணம் (Return Air Ticket all taxes). உயர்தரத்திலான மூன்று நேர சைவ உணவு, காலை, மாலை தேநீர் மற்றும் குளிர்பானங்கள், சுத்தமான குடிதண்ணீர் (Minaral water), குளியலறை இணைந்த தங்குமிட வசதி. (Attached Bathroom with hot water) முழு சுற்றுலாவுக்கும் குளிரூட்டப்பட்ட சொகுசு பேருந்து. திருப்பதியில் VIP வரிசையில் சென்று சுவாமி தரிசனம் செய்ய ஏற்பாடு செய்து தரப்படும், இருவழி விமான நிலையத்துக்கான கட்டணம் (Airport transport up & down).

சென்னையில் பொருள்கள் கொள்வனவு செய்ய ஒருநாள் ஒதுக்கப்படும்.

பதிவுகளுக்கு முந்துங்கள் இறுதித்திகதி 30.11.2014

ik tourism T.P:077 1010 104

கருணாகரப்பிள்ளையார் கோயில் வீதி, (இளந்தாரி கோயிலடி.)இணுவில் கிழக்கு, இணுவில்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.